பக்கங்கள்: பன்னிரண்டு + 12 = 24

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 20 வியாழக்கிழமை (05-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:282

# புலிகள் மீதான தடை நீக்கம்!

## நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு

கொழும்பு,செப்ரெம்பர்5

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை இலங்கை அரசு நேற்று நள்ளிரவுடன் நீக்கியது. நேற்று மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதுகுறித்து அறிவிக்கப்பட்டது.**

நேற்று மாலை அமைச்சரவைக் கூட்டம் ஆக பதினைந்து நிமிடங்களே நடைபெற்றதாகத் தெரியவந்தது. ஆனால், கூட்டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா சமுகந்தரவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கும் வர்த்தமானி அறிவித்தலுக்கான உத்தரவில் தாம் ஏற்கனவே கையெழுத்திட்டுவிட்டார் என்பதைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அங்கு அறிவித்தார்.

புலிகள் மீதான தடை நீக்கம் தொடர்பான அறிவிப்பு நேற்று நள்ளிரவு (இன்று அதிகாலை) முதல் நடைமுறைக்கு வருகின்றது என்ற தகவலையும் அவர் அங்கு வெளியிட்டார்.

அரசு - புலிகள் பேச்சுக்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தடை நீக்கம் குறித்து பிரதமர் மகாநாயக்கர்களுக்கு விளக்கம்

கண்டி,செப்.5

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக்காலை கண்டிக்கு விஜயம்செய்து மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துப பேச்சு நடத்தினார். புலிகள் இயக்கம் மீதான தடைநீக்கம், தாய்லாந்துப் பேச்சுக்கள் ஆகியவற்றின் இன்றையநிலை குறித்து அவர் மகாநாயக்கதேரர்களிடம் விளக்கிக் கூறியிருக்கிறார்.

பிரதமர் ரணிலுடன் ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவும் உடன சென்றிருந்தார்.

"சமாதானப் பேச்சுக்களின்போது நாட்டின் பாதுகாப்பைக் கருதி படைகளை உஷார்நிலையில் வைத்திருக்க வேண்டும். யாருடன் பேச்சு நடத்தினாலும் எமது நாடு, எமது இனம் என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும் என்ன நடைபெறுகின்றது என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாம் மக்களுடனேயே இருக்கின்றோம்." என்று மல்வத்தை பீடாதிபதி வணரம்புக்வெல்லே

(12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைக் கடற்பரப்பில் 'டோரா' பீரங்கித் தாக்கு!

### அச்சத்தால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை

வவுனியா,செப்.5

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் நேற்று மாலை கடற்படையினர் டோராப் படகில் இருந்து தன்னிச்சையாக வான் நோக்கி நடத்திய பீரங்கித் தாக்குதல் காரணமாக மீனவர்கள் எவரும் கடலுக்குச் செல்லவில்லை.

முல்லைத்தீவுக் கடற்கரையில் இருந்து 5 கடல்மைல் தொலைவில் நின்ற கடற்படையின் டோராப் படகு ஒன்றே வானத்தை நோக்கி இத்தாக்குதலை மேற்கொண்டதாகவும் -

இதனால் அச்சமடைந்த மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை எனவும் -

தாக்குதல் நடத்திய டோராவுக்கு பாதுகாப்பாக மேலும் இரு டோராக்கள் அப்பகுதியில் ரோந்து சுற்றின எனவும் -

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது என்றும் -

'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

(ம-எ)

### மறியற்போராட்ட முஸ்தீபுகளை அடுத்து

## ஊர்காவற்றுறை-மெலிஞ்சிமுனை வீதி இரவோடு இரவாகத் திறப்பு!

யாழ்ப்பாணம்,செப்.5

ஊர்காவற்றுறை செபஸ்தியார் கோயில் சந்தியில் இருந்து ஈ.பி.டி.பி. அமைப்பின் முகாம் முன்பாக மெலிஞ்சி முனை நோக்கிச் செல்லும் பூங்கா வீதி பொதுமக்கள் போக்குவரத்துக்காக நேற்றுமுன்தினம் இரவோடு இரவாகத் திறந்துவிடப்பட்டுள்ளது.

இந்த வீதியை பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடுமாறு கோரி செபஸ்தியார் கோயில் சந்தியில் உள்ள ஈ.பி.டி.பி. அமைப்பின் முகாம் முன்பாக நேற்று மறியற்போராட்டம் ஒன்று இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

ஆனால், நேற்றுமுன்தினம் இரவே வீதியின் குறுக்கே நடப்பட்டிருந்த பனங்குற்றிகள், முட்கம்பி வேலிகள் என்பன அகற்றப்பட்டு வீதி திறக்கப்பட்டிருந்ததை நேற்றுக் காலையில் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வீதியில் ஈ.பி.டி.பியின் மிகப் பெரிய முகாம் அமைந்துள்ளமையினால் இவ்வீதியை இடைமறித்து பாரிய பாதுகாப்பு வேலிகள் முன்னர் போடப்பட்டிருந்தன. காவலரண்களும அமைக்கப்பட்டிருந்தன. எனினும் அவை முற்றாக அகற்றப்பட்டு பாதுகாப்பு வேலிகள் தீயிட்டு எரிக்கப்பட்டிருந்ததையும் காணக்கூடியதாகவிருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று தேர்

யாழ்ப்பாணம்,செப்.5

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் இரதோற்சவம் இன்று காலை பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 6.15 மணிக்கு (பழைய நேரப்படி) வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு (பழைய நேரம்) ஆறுமுகப் பெருமான் இரதத்தில் எழுந்தருளுவார். அதனைத் தொடர்ந்து தேர்ப்பவனி ஆரம்பமாகும்

நல்லூர் கந்தன் இரதோற்சவத்தை பக்திபூர்வமாக நடத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-10)

**வாசகர்களே!**

இன்றைய உதயன் இரண்டு பிரிவுகளாக வெளிவருகின்றது. முதலாவது செய்திப் பிரிவு பன்னிரண்டு பக்கங்களுடனும், இரண்டாவது பிரிவு நல்லூர்க் கந்தன் இரதோற்சவச் சிறப்பிதழ் பன்னிரண்டு பங்கங்களுடனும்.

இருபிரிவுகளையும் தவறாது கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## தாய்லாந்துப் பேச்சுகளுக்கு தனது பிரதிநிதி ஒருவரையும் அனுப்ப ஜனாதிபதி முயற்சி!

கொழும்பு,செப்.5

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் எதிர்வரும் 16ஆம் திகதி தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுக்களில் தனது பிரதிநிதி ஒருவரையும் இடம்பெறச் செய்வதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விருப்பம் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அரசுத் தரப்பின் பதிலை அவர் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்.

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார். அவர் அங்கு கூறிய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

தாய்லாந்துப் பேச்சுக்களை ஜனாதிபதி உற்சாகத்துடன் வரவேற்கின்றார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற முறையில் தனது பிரதிநிதியும் இந்தப் பேச்சுக்களில் சேர்த்துக்கொள்

(12ஆம் பக்கம் பார்க்க)



தாய்லாந்துப் பேச்சுக்களில் கலந்துகொள்ளவுள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள். இடமிருந்து வலமாக அன்டன் பாலசிங்கம், புலிகளின் சட்ட நிபுணர் விசுவநாதன் உருத்திரகுமாரன், அபிவிருத்தித்துறை நிபுணர் டாக்டர் ஜே.மகேஸ்வரன், திருமதி அடேல் பாலசிங்கம்.

### ஜனாதிபதி இணங்கினாலும் இணங்காவிட்டாலும்

## 9ஆம் திகதி அரச வர்த்தமானியில் 19ஆவது அரசமைப்புத் திருத்தம்!

### நாடாளுமன்றுக்கு 16ஆம் திகதி வரும்

கொழும்பு,செப்.5

19ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் எதிர்வரும் 9ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்படும். அந்த அரசமைப்புச் சட்டத்திருத்த நகல் சட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்தத் தீர்மானங்களை அரசாங்கம் இப்போது மேற்கொண்டிருக்கின்றது.

19 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் தொடர்பான தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நாளை வெள்ளிக் கிழமைவரை அவகாசம் வழங்கப்பட்டிருப்பதற்கு மத்தியிலேயே இந்த நகல் சட்டத்தை 9ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடுவதற்கான முன்னேற்பாடுகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்துக்களையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு அரசமைப்புத் திருத்தச் சட்ட நகல் பூர்த்தி செய்யப்படும்.

எவ்வாறாயினும், இந்த அரசமைப்புச் சட்டத்திருத்தத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா இணங்கினாலும் இணங்காவிட்டாலும் சட்டத்திருத்த நகலை

(12ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## சச்சின் டெண்டுல்கரின் 100ஆவது டெஸ்ட் போட்டி

இந்தியத் துடுப்பாட்ட நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர் இன்று தனது நூறாவது டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளார். இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி இன்று லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டி டெண்டுல்கரின் 100ஆவது டெஸ்ட் போட்டியாகும்.

இதுவரை 24பேர் நூறு டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியுள்ளனர். ஆனால், மிக இளம்வயதில் இம்மைல்



கல்லை எட்டிப் பிடித்த வீரராகிறார் டெண்டுல்கர். தனது 29ஆவது வயதில் அவர் 100ஆவது டெஸ்ட்டில் பங்குபற்றுகிறார்.

1989இல் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டி மூலம் சர்வதேச கிரிக்கெட்டிற்கு அறிமுகமானவர் டெண்டுல்கர்.

இதுவரை 8,351 டெஸ்ட் ஓட்டங்களை அவர் குவித்துள்ளார். சுனில் கவாஸ்கருக்கு அடுத்ததாக ஆகக்கூடுதலான டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்ற வீரராக டெண்டுல்கர் திகழ்கிறார். 30 டெஸ்ட் சதங்கள் குவித்ததன் மூலம் உலகின் இரண்டாவது ஆகக்கூடுதலான டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்ற வீரராகவும் டெண்டுல்கர் விளங்குகிறார்.

ஒருநாள் போட்டிகளிலும் 11,174 ஓட்டங்களைப் பெற்றுள்ளார் அவர். இதன்மூலம் சர்வதேசப் போட்டிகளில் மொத்தமாக 20,000 ஓட்டங்களைப் பெற்ற முதல் வீரர் எனும் பெருமையைப் பெறுவதற்கு டெண்டுல்கருக்கு இன்னும் 374 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன.

இதுவரை 8 தடவை டெஸ்ட் போட்டிகளின் சிறப்பாட்டக்காரர் விருதையும் டெண்டுல்கர் வென்றுள்ளார்.

இளம்வயதில் 1,000 டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்றமை, ஒருநாள் போட்டிகளில் கூடுதலான ஓட்டங்களையும் ஆகக் கூடுதலான சதங்களையும் பெற்றமை உட்பட பல சாதனைகளைப் படைத்தவர் டெண்டுல்கர். 100ஆவது டெஸ்ட் அவரின் கிரிக்கெட் வாழ்வின் முக்கிய மைல்கல்லாக விளங்குகிறது.

1932இல் இந்தியா தனது டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற ஆரம்பித்தது. இன்று நடைபெறவுள்ள போட்டி இந்தியாவின் 360ஆவது டெஸ்ட் போட்டியாகும்.

1989இல் டெஸ்ட் உலகிற்கு அறிமுகமான சச்சின் இவற்றில் 100 போட்டிகளில் பங்குபற்றியுள்ளார் என்பது அவருக்குப் பெருமையளிக்கக் கூடியதாகும்.

100 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய பெருமைக்குரிய நான்காவது இந்திய வீரர் டெண்டுல்கர் ஆவார். முஹமட் அஸாருதீன் 99 போட்டிகளில் பங்குபற்றியுள்ளார்.

சர்வதேச போட்டிகளில் அதிக சதங்களைக் குவித்துள்ள டெண்டுல்கர், தனது 100ஆவது டெஸ்டிலும் சதம் குவிப்பாரா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இதுவரை கொலின் கௌட்ரி ஜாவிட் மியண்டாட், கோர்ட்டன் கிறீனிட்ஜ், அலக் ஸ்டுவர்ட் ஆகியோர் இச்சாதனையைப் புரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### ஒப்பந்தத்தில் கையெழுத்திட தென்னாபிரிக்க வீரர்கள் சம்மதம்

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு தென்னாபிரிக்க வீரர்கள் இணங்கியுள்ளனர். இவ்வாறு தென்னாபிரிக்காவின் ஐக்கிய கிரிக்கெட் சபை (யூ.சி.பி.) நேற்று அறிவித்தது.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு, தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் மூலம் வீரர்கள் திங்களன்று மறுப்புத் தெரிவித்தனர்.

எனினும் நேற்றுத் தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொனி ஐரிஷும் யூ.சி.பியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெரால் மஜோலாவும் நடத்திய பேச்சுக்கள் மூலம் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இவ்வாறு யூ.சி.பியின் ஊடக இயக்குநர் பிரோனின் விஸ்கின்சன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (ம)

### உதைபந்தாட்ட போட்டி

வலி.வடக்கு,செப்.5

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை கந்ரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத் தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

*14 வயதுப் பிரிவு*

★ ஏழாலை மகாவித்தியாலம் எதிர் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலயம்.

★ சுன்னாகம் மயிலணி சைவ மகாஜன வித்தியாலணம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி

*16 வயதுப் பிரிவு*

★ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதக் கல்லூரி

*18 வயதுப் பிரிவு*

★ இணுவில் மத்திய கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம். (ம-86)

## வடமராட்சி சம்பவத்தை அடுத்து
# சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை
## உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை

வடமராட்சி,செப்.5

சட்டவிரோதமான நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபட்டால் எதிர்காலத்தில் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் யாழ்.மாவட்ட உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் டி.பிரேமரட்ண.

வடமராட்சிப் பகுதி பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 2ஆம் திகதி பெருமளவு மாணவர்களும், பொதுமக்களும் பருத்தித்துறையில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் சட்டவிரோதமாக நுழைந்து கலவரத்தை ஏற்படுத்தியதுடன் பாரதூரமான சேதங்களையும் விளைவித்துள்ளனர்.

சில சக்திகள் மாணவர்களைக் கொண்டு அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளைக் குழப்ப முயன்றுள்ளனர். எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்படும்.

ஆகவே, மாணவர்கள் எவரும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என மாணவர்களுக்கு அறிவுரை (புத்திமதி) வழங்குமாறு வேண்டுகிறோம் - என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-173)

# குடாநாட்டில் வாந்திபேதி அபாயம் ஒருவர் உயிரிழப்பு; 10பேர் பாதிப்பு!
## யாழ். ஆஸ்பத்திரியில் தனி 'வார்ட்' அமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்.குடாநாட்டில் வாந்திபேதி நோய் வேகமாகப் பரவிவருவதையடுத்து யாழ்.ஆஸ்பத்திரியில் வாந்திபேதி நோயாளர்களுக்கென தனியான விடுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்நோய் ஒரு தொற்றுநோய் என்பதால் அந்நோயாளர்களை ஏனைய நோயாளர்களுடன் வைத்து சிகிச்சை அளிக்கமுடியாத நிலையிலேயே, இவ்வாறு தனியான விடுதி அமைக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சனநடமாட்டம் அற்ற தனியான ஒரு கட்டடத்தில் மேற்படி விடுதி இயங்கத் தொடங்கியுள்ளது.

இதற்கென பயிற்றப்பட்ட தாதியர்கள் மற்றும் பணியாளர்கள், விடுதியில் பணியாற்றுகின்றனர். இவர்கள் தமக்கு மேற்படி நோய் தொற்றிக்கொள்ளாத வகையில் தடுப்பு மருந்துகளை எடுத்துக்கொண்ட பின்னரே பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை -

வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்ட மேலும் நால்வர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நீர்வேலி மத்தியைச் சேர்ந்த ஜே. வேலாயுதபிள்ளை(வயது 48), அவரது மனைவியான வேலாயுதபிள்ளை கோமளாதேவி(வயது42) ஆகியோரும் -

நவாலி தெற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை (வயது62), அராலி தெற்கைச் சேர்ந்த நடராசா கனகம்மா (வயது 62) ஆகிய நால்வருமே இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இவர்களுடன் கடந்த மூன்று நாள்களில் 11பேர் இந்நோயினால் பீடிப்பட்டு யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் -

இவர்களில் ஒருவர் முதல் நாளே உயிரிழந்ததும் தெரிந்ததே.

(இது குறித்த மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)

(எ-15)

### தேசிய மட்ட போட்டிக்கு தெரிவானோர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்.மாவட்டத்திலிருந்து தடகளம், பூப்பந்தாட்டம் மற்றும் மேசைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களில், தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட வீரர்களை இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கிற்கு வருகை தருமாறு மாவட்ட விளையாட்டு அதிகாரி கேட்டுள்ளார். (எ-9)

# 7 மீனவர்கள் மீது கடற்படை தாக்குதல்
## சின்னத்தீவுக் கடலில் சம்பவம்

மண்டைதீவுக்கு அருகேயுள்ள சின்னத்தீவுக் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஏழு மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

குருநகரில் இருந்து இரு வள்ளங்களில் சென்ற இந்த மீனவர்கள் அந்தப் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்ததாகவும் -

அச்சமயம் அங்கு ரோந்துவந்த கடற்படையினர் மீனவர்களை அண்மித்து தடிகளால் தாக்கியதுடன் தகாத வார்த்தைகளால் ஏசியதாகவும் - பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

சுமார் 10 கடற்படையினர் தம்மைத் தாக்கியதுடன் தம்மிடம் இருந்த 15 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்களை எடுத்துச்சென்றனர் என்றும் -

தமது வலைகளையும் அவர்கள் சேதமாக்கிவிட்டனர் என்றும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மேலும் சொன்னார்கள்.

தாக்குதலுக்குள்ளான மீனவர்களின் பெயர்கள் வருமாறு:-

மக்டொனால்ட் ஜெராட் புறோன்சன் (வயது18), அன்ரன் றெஜினோல்ட (வயது 27), மக்ஸிமஸ் விஜயன் (வயது 24), ஜேசுதாசன் ஸ்ரீகுமார் (வயது 18), பிறேமன் கிருஷாந் (வயது 16), அருளப்பு விக்டர் பிறின்ஸ் (வயது 18), எஸ்.யைனர் (வயது35). (ம-10)

# பருத்தித்துறை வழமைக்குத் திரும்பியது ஆனால் ஹாட்லி, மெதடிஸ் இயங்கவில்லை

யாழ்ப்பாணம்,செப்.5

கடந்த இரு நாள்களின் பின்னர் பருத்தித்துறை நகரம் நேற்று வழமைக்குத் திரும்பியது.

திங்கட்கிழமை இடம்பெற்ற மாணவர் போராட்டம் மற்றும் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கடையடைப்பு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டிருந்த மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் நேற்று வழமை நிலைக்குத் திரும்பின.

ஆயினும் பருத்தித்துறை நகரின் மையப்பகுதியில் உள்ள படையினரின் நிலைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த கல்லூரி ஆகியன தொடர்ந்தும் மூடப்பட்டே உள்ளன.

படையினரின் முகாம் அமைந்துள்ள கொட்டடி, முதலாம் மற்றும் இரண்டாம் குறுக்குத் தெருப் பகுதிகளில் வசித்துவரும் 40 குடும்பங்கள் தமது தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்காக வெளியே வருவதற்குப் நேற்றுப் படையினர் அனுமதித்தனர்.

கொட்டடிப் பிள்ளையார்கோயில் மற்றும் கோட்டுவாசல் அம்மன்கோயில் ஆகியவற்றில் பூசைகளை நடத்தவும் வழிபாடு செய்யவும் படையினர் அனுமதித்துள்ளதை அடுத்து பிள்ளையார் கோயிலில் பூசைகள் நடைபெற்றன. ஆனால், அம்மன் கோயிலில் பூசைகள் நடைபெறவில்லை.

இதேவேளை - 'இந்துருவலி' கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு இரண்டாவது நாளாக நேற்றும் படையினர் அனுமதி வழங்கவில்லை.

(எ-10-173)

### கடற்படைப் படகு மோதி மீனவர் வள்ளம் சேதம்

யாழ்ப்பாணம்,செப்.5

பருத்தித்துறை, இன்பருட்டி கடற்கரைப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மீனவரின் வள்ளத்துடன் கடற்படையினரின் படகு மோதியதில் வள்ளம் பலத்த சேதமடைந்தது.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்ததுடன், வள்ளத்தை திருத்துவதற்கான பணத்தை வழங்குவதாகவும் உரிய மீனவரிடம் தெரிவித்துள்ளனர் எனக் கூறப்பட்டது. (எ-10-173)

# இந்திய 'விஸா' பெறுவதற்கு புதிய விண்ணப்பப்படிவம்

கொழும்பு,செப்.5

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் விஸா வழங்கும் சேவை கணனி மயப்படுத்தப்பட்டிருப்பதை அடுத்து விஸா விண்ணப்பப்பத்திரம் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. இப்புதிய பத்திரம் செப்ரெம்பர் 16 ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வருகிறது.

இப்பத்திரத்தை, இலவசமாகப் பெறமுடியும் என்றும் செப்ரெம்பர் 16ஆம் திகதிமுதல் விஸா பெற அதனைப் பயன்படுத்தலாம் என்றும் இந்தியத் தூதரகம் அறிவித்திருக்கின்றது.

பலதரப்பட்ட விஸாக்கள் தொடர்பான விபரங்களையும் வழிகாட்டல்களையும் விதிமுறைகளையும் இப்புதிய பத்திரம் கொண்டிருக்கிறது.

எதிர்வரும் காலங்களில் புகைப்படத்துடன் விண்ணப்பப்பத்திரம் 'ஸ்கான்' செய்யப்படவிருப்பதால் விஸாவுக்கு விண்ணப்பிப்போர் முத்திரையளவு இரண்டு புகைப்படங்களை ஒட்டுமாறு கோரப்பட்டுள்ளனர். (ம)

# இஸ்ரேலிய அமைச்சர் பேசிய கூட்டத்தில் பெரும் வன்முறை!

## தென்னாபிரிக்காவில் சம்பவம்

ஜோஹன்ஸ்பர்க்,செப்.5

ஜோஹன்ஸ்பர்க் நகரில் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் ஷிமோன பெரஸ் பேசிய கூட்டத்தில் கலந்துகொண்டோர் மீது மாணவர்கள் தாக்குதல் நடத்தி வன்முறையில் ஈடுபட்டனர்.

தென்னாபிரிக்காவில் நடைபெறும உலக ஐ.நா. மாநாட்டில் பங்கேற்க வந்த இஸ்ரேலிய அமைச்சர் ஷிமோன பெரஸ், ஜோஹன்ஸ்பர்க் நகரில் ஒரு கல்லூரியில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டார். இஸ்ரேல் அமைச்சர் தென்னாபிரிக்காவில் இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்த இஸ்ரேல் எதிர்ப்பாளர்களும், மாணவர்களும் கூட்டம் முடிந்து வெளியே வந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தி வன்முறையில் ஈடுபட்டனர்.

பொலீஸார் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார். மேலும் கட்டார் பத்திரிகையாளர், செய்தி நிறுவன தொலைக்காட்சி புகைப்படக்காரர் உள்ளிட்ட பலர் காயமடைந்தனர்.

'பலஸ்தீனர்களுக்கு சுதந்திரம் வேண்டுமானாலும் தனி மாநிலம் வேண்டுமானாலும் தர இஸ்ரேல் தயாராக உள்ளது. ஆனால் எதற்காக இந்த வன்முறை என்று தெரியவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களைப் பற்றியும் புரிந்து கொள்ள முடியவில்லை' என ஷிமோன் பெரஸ் தெரிவித்தார்.

உலக மாநாட்டின்போது பல்வேறு அமைப்பினர் இஸ்ரேலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பின்லேடன் வேட்டையை கைவிடவேண்டும் அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றார்கள்

நியூயோர்க்,செப்.5

சர்வதேச தீவிரவாதியான ஒசாமா பின்லேடனைப் பிடிப்பதற்காக அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானில் தீவிர வேட்டையில் ஈடுபட்டு உள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் தொடங்கிய இந்த வேட்டையில் 9 மாதங்கள் முடிந்த பிறகும் பின்லேடனைப் பிடிக்க முடியவில்லை.

இதனால் அமெரிக்க மூத்த இராணுவ அதிகாரிகள், பின்லேடனைத் தேடிக்கொண்டு இருப்பது பயனற்றது என்றும் -

அவர் இறந்துபோய் இருப்பார் என்றும் -

இதனால் அவரைத் தேடும் வேட்டையை கைவிடவேண்டும் என்றும் -

கருத்து தெரிவித்து உள்ளனர்.

இராணுவ அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டு உள்ளதாக அறிய முடிகிறது. (ஒ)

# தேவாலயத்துக்குள் புகுந்த நபர் சிறுவர்களை வெட்டிச் சாய்த்தார்!

## தென்கொரியாவில் வெறிச்செயல்

சியோல்,செப்.5

தென்கொரியாவில் தேவாலயம் ஒன்றுக்குள் கத்திகளுடன் நேற்று நுழைந்த நபர் 9 சிறுவரை கண்மூடித்தனமாக வெட்டினார்.

தலைநகர் சியோலில் உள்ள நியோவ் டொங் தேவாலயத்தில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

தேவாலய சிற்றுண்டிச் சாலையில் மதிய உணவ அருந்திக் கொண்டிருந்த சிறுவர்களே அந்த நபரின் வெறித் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் ஆவர். தாக்குதலுக்குள்ளானவர்களில் முகத்திலும், கழுத்திலும் வெட்டப்பட்ட 3 சிறுவர்கள் ஆபத்தான நிலையில் உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.



தென்கொரியாவில் சிறுவர்களை வெட்டிய நபர் பொலீஸ் நிலையத்தில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். அவர் பயன்படுத்திய கத்திகளும் அருகில் உள்ளன.

வேலையற்ற 53 வயதான வாங் என்ற நபரே இந்த வெறிச் செயலைப் புரிந்ததாகவும் -

அவர் இரு கைகளிலும் இரண்டு கத்திகளை ஏந்தி தாறுமாறாக சிறுவர்களை வெட்டியதாகவும் -

தாக்குதலுக்குள்ளான சிறுவர்கள், 6 மற்றும் 7 வயதுடையவர்கள் என்றும் -

மாவட்ட பொலீஸ் அதிகாரி லெப்டினன்ட் கிம்சாயென் தெரிவித்தார்.

சுமார் 30 நிமிடங்கள் வாங் வெறித தாக்குதலை நடத்தியுள்ளார். தேவாலய நிர்வாகத்தினர். பொலீஸாருக்கு தகவல் தந்ததையடுத்து அங்கு விரைந்த பொலீஸார் அந்த நபரை மடக்கிப் பிடிதது்க் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு ஒரு அசரீரிக் குரல் 'மற்றவர்களை நீ கொல்லாவிட்டால் நீ உயிரிழப்பாய்' என்று தனக்குக் கூறியதாகவும் -

அதனாலேயே தேவாலயத்துக்குச் சென்று இறைவனை வழிபட்டுவிட்டு, மற்றவர்களைக் கொலை செய்யும் நடவடிக்கைகளைத் தான் ஆரம்பித்ததாகவும் -

விசாரணையின் போது பொலீஸாரிடம் வாங் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மனநிலைப் பாதிப்புக்கு உள்ளாகியிருந்த வாங், அதற்கான சிகிச்சை பெற்று வந்தது தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ)

### பாகிஸ்தானில் பத்திரிகைகளுக்கு புதிய சட்டம்

பாகிஸ்தானிய அரசு 'நடத்தை நெறிமுறைகள்' என்ற பெயரில் பத்திரிகையாளர்களுக்கு சில புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதன்படி அவதூறாக செய்தி வெளியிடும் பத்திரிகைகளுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் இந்தத்தொகையைச் செலுத்தத் தவறினால் 3மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும். (ஒ)

# காதல் லஞ்சம் கொடுக்காத காதலன் அடித்துக்கொலை

பங்களாதேஷில் 'காதல் லஞ்சம்' கொடுக்காததால் வாலிபர் ஒருவரை கும்பல் ஒன்று அடித்துக் கொன்றது.

நாராயண்கஞ்ச் நகரைச் சேர்ந்தவர் நூர் ஆலம். 18 வயதான இவர் ஒரு பெண்ணை காதலித்தார். இதைப் பார்த்துவிட்ட ரௌடிக்கும்பல் ஒன்று லஞ்சம் கொடுத்தால் தான் தொடர்ந்து காதலிக்கலாம் என்று கூறி 2 ஆயிரம் ரூபா கேட்டது. நூர் ஆலமிடம் 600 ரூபா மட்டுமே இருந்தது.

இதனால் அவரை அந்தக் கும்பல் ஒரு மரத்தில் கட்டிவைத்து அடித்தது. இதில் அவருக்கு மயக்கம் ஏற்பட்டது. சுய நினைவு இழந்தார்.

அதன் பிறகு அந்தக் கும்பல் ஓடிவிட்டது. அந்த வழியாகச் சென்றவர்கள் அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவர் இறந்து விட்டார்.

இது தொடர்பாக பொலீஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பிரிட்டிஷ் கப்பலில் தீ; 600 பேர் தப்பினர்!

லண்டன்,செப்.5

பிரிட்டனின் வடகிழக்குப் பகுதியில் பயணிகள் கப்பலில் தீப்பிடித்தது. அந்தக் கப்பல் ஹல் துறைமுகத்தில் இருந்து பெல்ஜியத்தில் உள்ள ஜெப்ரா நகருக்கு 611 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்தது. அதில் 124 பணியாளர்கள் இருந்தனர்.

துறைமுகத்தை விட்டு சிறிது தூரம் சென்றதும் கப்பலின் இயந்திர அறையில் தீப்பிடித்தது. அதைத்தொடர்ந்து கடற்கரை பாதுகாப்புப் படைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. உடனே தீயை அணைக்க ஹெலிகளிலும், படகுகளிலும் வீரர்கள் விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். பயணிகள் அனைவரும் காயமின்றி தப்பிவிட்டார்கள். அவர்களை மீட்டுக் கரைக்கு கொண்டவர 10படகுகள் அனுப்பப்பட்டன. (ஒ)

உலக அரங்கில்

### அமெரிக்காவில் விமான விபத்து!

பொஸ்டன்,செப்.5

அமெரிக்காவில் விமானம் விழுந்து நொறுங்கியதில் 7 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சிறிய விமானம் வடகிழக்குப் பகுதியில் நியூஹாம் செயரில் ஸ்வான்சி விமான தளத்திலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் விழுந்து நொறுங்கியது. இந்த விமானம் சார்லஸ்டன் நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.விபத்தில் 2 குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

# எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை நிரந்தர எல்லையாக்க முஷாரப் முயற்சி

இஸ்லாமாபாத்,செப்.5

காஷ்மீரில் உள்ள எல்லைக் கட்டுபாட்டுக் கோட்டை நிரந்தர எல்லை ஆக்கலாம் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளார். இதற்காக அவர் அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளார்.

காஷ்மீர் மாநிலத்தின் ஒரு பகுதி இந்தியா வசமும், மற்றொரு பகுதி பாகிஸ்தான் வசமும் உள்ளன.

இந்த இரு பகுதிகளையும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பிரிக்கிறது. இந்த எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை நிரந்தர எல்லையாக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் முயற்சி செய்து வருகிறார்.

இதற்காக அவர் அமெரிக்காவின் உதவியை நாடியிருக்கிறார். எதிர்வரும் 11 ஆம் திகதி முஷாரப் அமெரிக்காவிற்குச் செல்கிறார். அங்கு அமெரிகத் தலைவர்களை சந்தித்துப் பேசும் போது தனது கருத்துக்கு ஆதரவு திரட்டுவார் என்று தெரிகிறது.

பாகிஸ்தானில் தனது படையை நிரந்தரமாக நிறுத்த அமெரிக்கா விரும்புகிறது. பாகிஸ்தான் அதிபர் தங்களிடம் உதவி கேட்டால் தங்களது கோரிக்கையை வலியுறுத்த அமெரிக்கத் தலைவர்கள் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

# ஜப்பானிய மின்நிலையம் அணுக் கசிவால் மூடப்பட்டது!

ஜப்பானில் டோக்கியோ அருகே அணுமின் நிலையத்தின் அணு உலையில் கசிவு ஏற்பட்டதால், தனியாரால் நடத்தப்படும் அந்த அணுமின் நிலையம் மூடப்பட்டது.

டோக்கியோ மின்சாரக் கூட்டுத்தாபனம் என்ற அந்நிறுவனத்தில் ஊழல நடந்திருப்பதாக புகார் எழுந்தது. இப்புகார் வெளியான சில மணி நேரத்திலேயே அணு உலையில் கசிவு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மிகவும் சிறிதளவுதான் கசிவு ஏற்பட்டது என்று அந்நிறுவனம் கூறியுள்ளது. இது உலகிலேயே மிகப் பெரிய தனியார் மின் உற்பத்தி நிறுவனமாகும்.

இந்த அணு மின் நிலையத்தில் விரிசல்கள் மற்றும் சேதம் ஏற்பட்டிருப்பதை மறைக்கும் விதத்தில் சோதனை ஆவணங்கள் திருத்தப்பட்டிருப்பது சமீபத்தில் தெரியவந்திருந்தது. (ஒ)

# சோனியா காந்திக்கு எதிராக ஜெயலலிதா போர்க் கோலம்!

சென்னை,செப்.5

வெளிநாட்டைச் சேர்ந்த சோனியா காந்தி பிரதமராவதை ஆதரிக்க வேண்டாம் என வலியுறுத்தித் தேசிய அளவில் பிரசாரம் செய்யத் தாம் தயாராக இருப்பதாக முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

தமிழகத் தலைமைச் செயலகத்தில் அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

'நாட்டின் பிரதமராக வேண்டும் என விரும்புவர் நாட்டுப்பற்று உடையவராக இருக்கவேண்டும், 1968இல் ராஜீவ் காந்தியைத் திருமணம் செய்து கொண்ட இத்தாலி நாட்டுப் பிரஜையான அன்டோனியோ மைனோ (சோனியாவுக்குப் பெற்றோர் வைத்த பெயர்), வெளிநாட்டுச் சட்டத்தின்படி இங்கு 5 ஆண்டுகள் தங்கியிருக்க மட்டுமே முதலில் அனுமதி பெற்றார்.

அந்த அனுமதி 1973இல் காலாவதியானது. அன்டோனியோ விரும்பி இருந்தால் அப்போது இந்தியப் பிரஜையாக விண்ணப்பித்திருக்கலாம்.

ஆனால், 1973இலும், 1978இலும் இந்தியாவில் தங்கியிருக்க அனுமதி பெற்றார். 1982இல் நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில் வேண்டாவெறுப்பாக இந்தியப் பிரஜையாக விண்ணப்பம் செய்தார்.

அப்போதுகூட அவருக்கு இந்திரா காந்தி வைத்த இந்தியப் பெயரான சோனியா எனக் கையெழுத்திடவில்லை. அன்டோனியோ மைனோ என்றுதான் கையெழுத்திட்டார்.

சஞ்சய் காந்தியின் மறைவுக்குப் பின் ராஜீவ்தான் இந்திராவின் வாரிசாக வருவார் என்ற நிலையில், இந்திய அரசியல் சட்டத்தின் விதியைப் பூர்த்திசெய்யும் வகையில் சோனியா இந்தியப் பிரஜையானார்.

சோனியாவும், பேராசை பிடித்த அவருடைய குடும்பத்தினரும் இந்தியாவைச் சூறையாடினர். இத்தாலி நாட்டினருக்கு இங்கு ஒப்பந்தங்கள் பெறுதல், புராதனப் பொருள்களைக் கடத்த உதவியது போன்றவற்றில் ஈடுபட்டனர்.



தமிழக தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த முதல்வர் ஜெயலலிதாவின் பல்வேறு முகபாவங்கள்.

புராதனப் பொருள் கடத்தல் தொடர்பாக சோனியா மீதும், அவருடைய சகோதரிகள் மீதும் சி.பி.ஐ. விசாரணை நடக்கிறது.

என்மீது குற்றச்சாட்டுகள் இருப்பதாகக் கூறும் காங்கிரசார், தங்கள் தலைவி சோனியா மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்கு முதலில் பதில்சொல்ல வேண்டும்.

சோனியா அரசியலுக்கு வருவதை இந்திராவோ, ராஜீவோ விரும்பவில்லை. ஆனால், இப்போது அவர்களின் பெயர்களைப் பயன்படுத்தி அரசியல் வியாபாரம் செய்கிறார் சோனியா.

அரசியல் தலைவர்கள் சேர்ந்து பேசி, வெளிநாட்டவர் இந்தியப் பிரதமராக வரக்கூடாது என்பதற்கு உறுதியான முடிவெடுக்கவேண்டும். ஆயிரக்கணக்கானோர் ரத்தம் சிந்தி சுதந்திரம் பெற்றது எதற்காக? சுதந்திரம் பெற்ற 50 ஆண்டுகளில் மீண்டும் வெளிநாட்டவரிடம் நாட்டை ஒப்படைக்கவா என்பதை நேரு, இந்திரா, ராஜீவ் பாரம்பரியத்தில் விசுவாசம் உள்ளவர்களும், காங்கிரசாரும் சிந்திக்கவேண்டும்.

அமெரிக்காவில் அதிபர் பதவிக்கு வருபவர் அமெரிக்காவில் பிறந்தவராகவும், 14 ஆண்டுகள் அங்கு வாழ்பவராகவும் இருக்கவேண்டும் என்பது சட்டம். தேசப் பற்றுள்ள நமது நாட்டு மக்கள் வெளிநாட்டவரைப் பிரதமராக்கும் வாய்ப்பை அளிக்கமாட்டார்கள் என நம்புகிறேன் என்றார் ஜெயலலிதா. (ஒ)

# பிரபாகரனைப் பிடிக்க முடியாதபோது வீரப்பனை எப்படிப் பிடிக்க முடியும்?

## தமிழக முதல்வர் இப்படிக் கேட்கிறார்

சென்னை,செப்.5

சிறிய பரப்பளவைக் கொண்ட காட்டுப்பாட்டுப் பகுதியில் பதுங்கியுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இலங்கை, இந்தியப் படைகளால் பிடிக்கமுடியாதபோது, பெரும் பரப்பளவைக் கொண்ட காட்டுக்குள் உள்ள சந்தன மரக்கடத்தல் வீரப்பனைப் பிடிப்பது கடினமான காரியமாகும் என்றார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோதே ஜெயலலிதா இதனைத் தெரிவித்தார்.

அவரது பேட்டிகுறித்து தமிழகப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தி வருமாறு -

"வீரப்பன் பதுங்கியிருக்கும் வனப்பகுதியானது சுமார் 17 ஆயிரம் சதுர கிலோ மீற்றர். தமிழக அதிரடிப்படையினர் ஆயிரம் பேர் மற்றும் கர்நாடக அதிரடிப்படையினர் 700 பேர் ஆக மொத்தம் ஆயிரத்து 700 பேர் வீரப்பனைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வீரப்பனைப் பிடிப்பது என்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை இலங்கையில் பிரபாகரனை பிடிக்கும் பணியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பதுங்கி வாழும் காட்டுப்பகுதி சுமார் ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவுதான். ஆனால் இலங்கைப் படையினர் மற்றும் இந்தியாவிலிருந்து அங்கு சென்ற ஏறக்குறைய ஒருலட்சம் பேர் கொண்ட அமைதிப் படையினர் அனைவரும் ஈடுபட்டும் பிரபாகரனைப் பிடிக்கமுடியவில்லை. பிரபாகரன் தன்னிச்சையாக வெளியுலகுக்கு வந்தாலோ அல்லது அரசியல் ரீதியில வெளிப்பட்டாலேயொழிய அவர் இருக்கும் இடத்தை அறிய முடியாது.

அப்படியிருக்கையில் இலங்கையுடன் ஒப்பிடும்போது வீரப்பன் பதுங்கி வாழும் வனப்பகுதி 17 மடங்கு அதிகமானது. தமிழ்நாட்டில் 8 எட்டாயிரம் சதுரகி.மீ., கர்நாடக மாநிலத்தில் 6 ஆயிரம் சதுர கி.மீ., மற்றும் கேரளாவின் 3 ஆயிரம் சதுர கிலோ மீற்றரை உள்ளடக்கியது வீரப்பன் வாழும் பகுதி. அப்படியென்றால் வீரப்பனைப் பிடிப்பது எவ்வளவு சிரமம் என்பதை அறிந்து கொள்வதற்காகத்தான் இந்த விபரங்களைத் தெரிவிக்கின்றேன். என்றார் அவர். (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் உரும்பிராய்ச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ககணேசகுலசிங்கம் (ராஜன்), ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (7929)

## கார் விற்பனைக்கு

FORD PREFECT EN - Sight வால்வ் மொடல் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ.தங்கராசா,36/4, கச்சேரி நல்லூர் வீதி (கச்சேரிக்கு அருகில்), கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (7895)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள லான்சா கார் Box மொடல் 13-xxxx உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள்: 45, புதிய சிவன் வீதி, நல்லூர். (021-3826) கனகு மெக்கானிக், திருநெல்வேலி (புறோக்கர் தேவையில்லை). நேரில் வரவும். (7868)

சொந்தப் பாவனையில் உள்ள (one owner) ISUZU ELF - 250 சிங்கிள் வீல் மரபொடி வான் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: சியானாஸ், 77, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். (7890)

154 ஹொண்டா சுப்பக்கப் 50, DELUXE ECONOMY SELF START LANCER- மொடல் 1st OWNER மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 109, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (7906)

Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் குறைந்த விலையில் இன்று மாலை பெற்றுக்கொள்ளலாம். முதல்நாள் தடுப்பு மருந்து இலவசம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தியடி, நல்லூர். (7920)

நல்ல நிலையில் உள்ள அச்சியந்திரம் விற்பனைக்கு உண்டு. பெறுமதி ரூபா 2 லட்சம். தொடர்பு: திருதங்கராசா, வேளாதோப்பு, கல்வியங்காடு. (7924)

## தவறிவிட்டது

சாவகச்சேரி வடக்கு, கெருடாவிலைச் சேர்ந்த நாகமுத்து கந்தசாமி என்பவருடைய தேசிய அ.அ. (இல. 380650169V), விசேட அ.அ. என்பன 02.09.2002 திங்கட்கிழமை K.K.S. வீதிக்கும் யாழ்நகருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 175, 2ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (7894)

53, பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செ.பிறேம்குமார் என்பவரது மோட்டார் வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன கோப்பாய் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7887)

கோப்பாய் தெற்கு, ஆலங்குளியைச் சேர்ந்த சின்னராசா புவனேஸ்வரி என்பவரின் தேசிய அ.அ. (இல. 466620645V), விசேட அ.அ. என்பன 28.08.2002 புதன்கிழமை யாழ்.தபாலகத்துக்கும் பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (7897)

கரணவாய் வடக்கு (மத்தி), கரவெட்டியைச் சேர்ந்த இராசு ரஜினி என்பவருடைய தேசிய அ.அ. (இல. 736403633V), வி.அ.அட்டை, வங்கிப் புத்தகம் என்பன கறுப்பு நிற பேர்ஸுடன் பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவுசெய்து குஞ்சாவளவு, கரணவாய் மத்தி, கரவெட்டி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (7915)

இல.69, சீனியர்லேன், கலட்டியைச் சேர்ந்த ரிஷிகரன் சுகந்தி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.687813057V) நல்லூர் கோவில் சுற்றாடலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7925)

கூத்தோட்டம், வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த பரஞ்சோதி சாம்பசிவதாசன் என்பவருடைய தே.அ.அ. (இல.703521339V) கிளிநொச்சி, கண்டி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். தொடர்பு: P.சாம்பசிவதாசன், இல. 368, 5ஆவது குறிச்சி, ராமநாதபுரம், கிளிநொச்சி. (7931)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், பரணி, 75ஆம் ஆண்டு, 4இல் செவ்வாய், சுவிஸில் P.R. உள்ளவருக்கு அழகான, படித்த மணமகள் தேவை. தொடர்பு: கல்யாண மாலை திருமண சேவை, 67 A, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13. Tel.: 338162, Fax: 338161 (7893)

## மணமகன் தேவை

10.08.1969இல் பிறந்த, திருவாதிரை 4ஆம் பாதம், 4இல் செவ்வாயுள்ள நிரந்தர ஆசிரியராகக் கடமையிலுள்ள இந்து மணமகளுக்கு அரச, நிரந்தர ஆசிரியர், எழுதுவினைஞர் மணமகன் தேவை. தொடர்பு: வே.தம்பிஐயா, முன்னக்கட்டை, அல்வாய் வடமேற்கு, அல்வாய். (7875)

## வாடகைக்குத் தேவை

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் டாக்டர்களுக்கு இரு வீடுகள் வாடகைக்குத் தேவை. குறைந்தது முறையே மூன்று, நான்கு அறைகளுடன் மின்சாரம், நீர் வசதிகளுடையதாக, வைத்தியசாலை மற்றும் நல்லூரை அண்டிய பகுதிகளில் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. தொடர்பு: விளம்பர இல. 1627, C/O உதயன், யாழ்ப்பாணம். (7889)

## திருமண சேவை

யாழ்ப்பாணம், தீவுப் பகுதி, வன்னி, கொழும்பு, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ் போன்ற இடங்களிலும் அரச, தனியார் ஸ்தாபனங்களில் பணிபுரிபவர்களினதும் குறிப்புகள் எம்மிடம் உண்டு. தொடர்பு: கல்யாண மாலை திருமண சேவை, 67 A, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13. Tel.: 338162, Fax: 338161 (7892)

## தீவகத்தில் முத்திரையிடும் பணி

ஊர்காவற்றுறை,செப்.5

ஊர்காவற்றுறையில் நிறுவைகள், அளவைகள் மற்றும் நிறுக்கும் கருவிகளை பரிசோதித்து முத்திரையிடும் பணி எதிர்வரும் 10, 12, 13, 16ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை ஊர்காவற்றுறை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு, புளியங்கூடல், ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள், பல நோ.கூ.சங்கங்கள், சந்தை வியாபாரிகள் தத்தமது அளவைகள், நிறுவைகள் நிறுக்கும் கருவிகளை மேற்படி தினங்களில் பரிசோதித்து முத்திரையிட்டுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-16)

## வாந்திபேதியால் மேலும் இருவருக்கு பாதிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.5

தொடர்ந்து பரவலாகப் பரவிக்கொண்டிருக்கும் வாந்திபேதி நோயின் தாக்கத்திற்குள்ளாகி மேலும் இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நோய் அதிகமாகப் பரவத் தொடங்கியுள்ள ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைப் பகுதியில் வசித்த பிரான்சிஸ் சேவியர் சகாயராணி (வயது 38) என்பவரும், நல்லூர் வைமன் வீதியில் சி.தெய்வேந்திரராணி (வயது 69) ஆகிய இருவருமே இந்நோயினால் பீடிக்கப்பட்டு யாழ்.மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களுடன் இதுவரை 5 பேர் இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். (ஒ-15)

# வடமராட்சிக் கல்லூரிகள் மூடப்பட்டதற்குக் கண்டனம்

## ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

வடமராட்சியில் பிரபல இரு கல்லூரிகளைக் காலவரையின்றி மூடுமாறு இராணுவம் பணித்துள்ளமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக யாழ்.மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

மாணவர்களின் சுதந்திரமான கல்விக்கு எப்போதும் குரல் கொடுத்து வரும் எமது சங்கம், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு இணங்கப் பாடசாலையை விட்டு வெளியேறி மாணவர்களின் சுதந்திரமான கல்விக்கு வழிவிட வேண்டுமென சங்கம் பல்வேறு கட்டங்களில் பலதரப்பினிடமும் கோரிக்கை விட்டிருந்தது. ஆயினும் அதை நிறைவேற்றத் தவறியமையால்தான் இத்தகைய விரும்பத்தகாத சம்பவம் ஏற்பட்டுள்ளது என்பதை சங்கம் சுட்டிக்காட்டுகின்றது. எனவே, உடனடியாக பாடசாலைகளைத் திறந்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு வழிவிட வேண்டுமென இராணுவத்தையும் கல்வித் திணைக்களத்தையும் கேட்கின்றோம் - என்றுள்ளது. (ஒ)

## பண்ணையாளர்களுக்கு பயிற்சி வகுப்பு

ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, பராமரிப்பு, நோய்த்தடுப்பு போன்றவற்றைக் கால்நடை வளர்ப்போருக்கு விளங்க வைக்கும் ஒருநாள் பயிற்சி வகுப்பொன்று இம்மாத நடுப்பகுதியில் வலிகாமம் தெற்கு - உடுவில் பிரதேச கால்நடை வைத்தியர் பிரிவினரால் நடத்தப்பட உள்ளது. இவ் வகுப்பில் பங்குகொள்ள விரும்பும் பண்ணையாளர்கள் உடனடியாக சுன்னாகத்தில் அமைந்துள்ள கால்நடை வைத்தியர் காரியாலயத்தில் தமது பெயர்களை பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-152)


## இதோ பிரிவு II ஆரம்பம்!

யாழ்.மாணவர்களுக்கான

**வங்கியியல் கற்கைநெறி**

**B.Sc. (Hons) Degree & ACIB**

**DBF, ACBF, CBF**

வகுப்புகள் ஆரம்பம்.

விண்ணப்ப முடிவு திகதி:

10.09.2002

**Jaffna College Undergraduate Dept.**

464. Hospital Rd,

Jaffna.

(சி-23673)

கண்ணா கற்பூரம் கண்ணா கற்பூரம் கண்ணா கற்பூரம் கண்ணா கற்பூரம்

## கண்ணா கற்பூரம்

தேரேறிவரும் நல்லூர்க் கந்தன் அருள்பெற அன்பர்கள், வாடிக்கையாளர்களை வாழ்த்துகின்றோம்.

**SEAMAICE Co.,**

No.654/14, Industrial Estate, Ratmalana

(7485) Tel.: 624588 Fax: 591218

கண்ணா கற்பூரம் கண்ணா கற்பூரம் கண்ணா கற்பூரம் கண்ணா கற்பூரம்


## இன்று இசைக்கச்சேரி

*இடம்:* *நல்லை ஆதீன கலா மண்டபம்*
*நாள்:* இன்று (05.09.2002) வியாழக்கிழமை
*நேரம்:* காலை 10.30 - 11.15 வரை
*பாட்டு:* திருமதி S.ஜெயகௌரி (இசைக்கலைமணி)
செல்வி N.ஜெயபாரதி (கலைமாணி)
*வயலின்:* திரு.A.ஜெயராமன்
*மிருதங்கம்:* திரு.K.கஜன்
*கடம்:* திரு.M.கஜன்
*முகர்சிங்:* திரு.N.சதீஸ்குமார்

கலைஞர்கள், ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- திரு.S.நவரத்தினம்.

(7908)

## 16ஆம் ஆண்டு நினைவுகளில்

மண்ணின் மடியில் 20 - 04 - 1962



கடலின் அடியில் 05 - 09 - 1986

### அமரர் ஆறுமுகம் சடாவதனன்

(சடாயு, ஐயர், சுகுணன்)

ஆண்டுகள் பதினாறு உன்
தேடுதலில் முடிந்தாலும்
இன்னும் எம்
தேடுதல் தொடரும்
நூறாண்டுகள்!

*"சடாவதனம்",*
*சுதுமலை தெற்கு, மானிப்பாய்.*

- குடும்பத்தினர்.

(7917)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவியான *செல்வி த.ஹரிப்பிரியா*
(HNDA முதலாம் வருட மாணவி)
அவர்களின் அருமைத் தாயார்

### திருமதி தவகோபால் தேவராணி

அவர்கள் 23.08.2002இல் காலமான செய்திகேட்டு நாம் மிகவும் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் எமது சக மாணவிக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஆத்மா சாந்தி அடைவதாக!*

HNDA முதலாம் வருட மாணவர்கள்,
யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனம்,
திருநெல்வேலி.

(7928)

## நீங்காத நினைவில் ஓராண்டு

அன்னை மடியில் 22 - 01 - 1947



ஆண்டவன் அடியில் 17 - 08 - 2001

### அமரர் சுப்பிரமணியம் இராசரத்தினம்

(இணுவில் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் - உரிமையாளர்)

திதி: 05.09.2002

எமது அன்புத் தெய்வமே!
ஓராண்டு இங்கு ஒரு யுகமாகியது!
என்றும் ஓயாது உங்கள் நினைவலைகள்!
அன்புடனும் பாசத்துடனும் எமை அணைத்து
தீப ஒளியாய் சுடர்விட்டு வழிகாட்டினீர்களே! அப்பா!!
மீளாத் துயில் கொண்டு எமையெல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீரோ அப்பா?
என்றென்றும் அணையாது உங்கள் பாசதீபம்.

*"சரஸ்வதி இல்லம்",*
*இணுவில் தெற்கு,*
*இணுவில்.*

(7918)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

உதயன்

## நாளை நல்லது நடக்குமா?

நாளை - செப்ரெம்பர் ஆறாம் திகதி - எமது நாட்டைப் பொறுத்தவரை மிக முக்கியமான தினம். நாட்டின் தலைவிதிப்போக்கை நிர்ணயிக்கப்போகும் நாள் என்றுகூடச் சொல்லலாம்.

இரண்டு முக்கிய விடயங்கள் நாளை அரங்கேறப் போகின்றன. எதிர்பார்த்தபடி - திட்டமிட்டபடி - இணக்கமாக அவை நடந்துமுடிந்தால் நாட்டின் எதிர்காலம் சமாதானப் பாதையில் செல்வதற்கு அடித்தளம் இட்டாகிவிட்டது என்று கருதலாம். இல்லையேல் நாட்டினதும், சமூகத்தினதும் எதிர்காலம் கேள்விக்குறி என்பதும் நிச்சயமாகிவிடும்.

அந்த இரண்டு நிகழ்வுகளில் ஒன்று - விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்க விவகாரம்.

மற்றையது - 19ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக இணக்கத் தீர்வுகாணும் இறுதி முயற்சியாக ஜனாதிபதி - பிரதமர் சந்திப்பு.

இவை இரண்டும் நாளை நடக்க வேண்டியவை. சுமுகமாக அவை நடந்தேறுமா என்பதுதான் கேள்வி.

முதலாவது - நேரடியாக இனப்பிரச்சினையோடு தொடர்புடையது.

மற்றையது - 19ஆவது அரசமைப்புத் திருத்த விவகாரம்,- பெரும்பாலும் தென்னிலங்கை அரசியலுடன் தொடர்புடையது. என்றாலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியோடும் பிரிக்கமுடியாதவகையில் அது சம்பந்தப்பட்டிருக்கின்றது.

நீண்ட - பல தசாப்த - காலமாக நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு அமைதி முறையில் - சமாதான வழியில் - தீர்வுகாண்பதற்கான கடைசிச் சந்தர்ப்பம் இப்போது கிடைத்திருக்கின்றது.

அதை நல்ல முறையில் பயன்படுத்துவதில் தீவிரமாக இருக்கின்றார்கள் இரு இனங்கள் சார்ந்த தலைவர்களும்.

ஒருபுறம் ஈழத் தமிழரின் ஏகப் பிரதிநிதி என்ற அந்தஸ்தோடு தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். மறுபுறம் ஸ்ரீலங்கா அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகள் என்றவகையில் ஸ்ரீலங்கா அரசுடன் சம அந்தஸ்தில் - சட்டபூர்வமான அங்கீகாரத்துடன் - தாங்கள் பேச்சுக்களில் பங்குபற்றவேண்டும் என்றால் தங்களின் மீதான தடை நீக்கப்படவேண்டும்; தடைசெய்யப்பட்ட அமைப்பின் பிரதிநிதிகளாக இருந்துகொண்டு, சட்டபூர்வமான பேச்சுக்களில் கலந்துகொள்ளமுடியாது என்பது புலிகளின் தெளிவான நிலைப்பாடு: பல வருடங்களாகப் புலிகள் இதைத் தெளிவாக - வெட்டு ஒன்று துண்டு இரண்டாக - தெரிவித்து வந்துள்ளனர்.

அதேபோன்று, சமாதான முயற்சிகளை முன்னெடுத்திருக்கும் ரணிலின் அரசும், அந்த முயற்சிகளை முன்னகர்த்தவும், அது தொடர்பாகத் தேவைப்படும் சமயங்களில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவும் தனது அரசு ஸ்திரமாக இருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ளது. நினைத்த நேரம் அரசைக் கலைக்கும் அதிகாரத்தை, மாற்று அணியைச் சேர்ந்த ஒரு ஜனாதிபதி வைத்திருக்க - தனது அரசின் தலைக்கு மேல் கத்தி தொங்கிக்கொண்டிருக்கும் ஓர் இக்கட்டான நிலையில் - நாளைக்கு அரசு ஆட்சியில் இருக்குமா என்ற சந்தேகப் பின்னணியில் - சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது 'முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படும் நிலை' போன்றது என்பது அரசுக்குப் புரிகின்றது.

எனவே, சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் கருதி -

★ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும்.

★ அரசின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் 19ஆவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்படவேண்டும்.

இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் பெரும்பாலும் நாளை இறுதிமுடிவு எடுக்கும்நிலை உள்ளது.

அரசு - புலிகள் பேச்சுக்குப் பத்து நாள் முன்பதாகத் தடைநீக்கப்படும் என அரசு அறிவித்திருந்தது. அதன்படி தடை நாளை நீக்கப்படவேண்டும். ஆனால், அதைத் தடுப்பேன் என்று ஒற்றைக்காலில் நிற்கிறார் ஜனாதிபதி குமாரதுங்க.

அதேபோல, நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான தனது அதிகாரத்தை வெட்டுவதற்கு வகை செய்யும் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஜனாதிபதி இணங்குவாரா என்பதும் நாளை ஜனாதிபதி - பிரதமர் நேரடிச் சந்திப்பின்போது தெளிவாகிவிடும்.

இந்த இரு முக்கிய விடயங்களிலும் ஜனாதிபதியின் முடிவு - தீர்மானம் - முக்கியமானதாக அமையப் போகின்றது.

அவர் நல்ல முடிவை எடுப்பாராயின் அமைதி பிறக்கும். இல்லையேல் சமாதானம் கேள்விக்குறியாகிவிடும்.

# வாந்திபேதியைக் கட்டுப்படுத்த விழிப்புடன் செயற்படவேண்டும்!

## சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,செப்.5

இறப்பை உண்டாக்கும் வாந்திபேதி நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் விழிப்புடன் செயற்படுவது அவசியமாகும். தங்கள் சுகாதாரத்துக்கு தாமே பொறுப்பு என்ற எண்ணத்துடன் செயற்பட்டு வாந்திபேதியை ஒழிக்க அனைவரும் முயலவேண்டும்.

- இவ்வாறு சுகாதார சேவைக்கான மாகாண பிரதிப் பணிப்பாளர் டாக்டர் உ.சிவபாதசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாந்திபேதி நோய் தொடர்பாக செய்திக்குறிப்பு ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வாந்திபேதி ஒரு ஆபத்தான இறப்பை உண்டாக்கும் நோயாகும். இந்நோயை உண்டாக்கும் கிருமி (VIBRIO CHOLERA) விப்பிறியோ கொலறா என்னும் பக்டீரியா ஆகும்.

நோயாளி ஒருவரின் மலத்துடன் வெளியேறும் இக்கிருமி - உணவு, நீர், கைகள் போன்றவைமூலம் வாய்மூலமாக சுகதேகி ஒருவரின் உடலுட்சென்று நோயை உண்டாக்கும். அதிகளவு நீர்த்தன்மையான மலம், வாந்தி ஆகியவை காரணமாக நீரிழப்பு ஏற்படுவதனால் நோயாளி இறக்க நேரிடுகிறது. காலதாமதமின்றி அவசர சிகிச்சை பெறுவதால் மரணத்தைத் தவிர்க்கமுடியும்

மேலும் பின்வரும் தடுப்புமுறைகளைக் கடைப்பிடிப்பதால் வாந்திபேதி நோய்த்தொற்றைத் தவிர்க்கலாம்.

எப்பொழுதும் பாதுகாப்பான நீர் அருந்துதல்.

எப்போதும் மலங்கழிப்பதற்கு மலகூடத்தையே பாவிக்க வேண்டும். சிறுவர் மலத்தையும் மலகூடத்தில் இடுதல் வேண்டும்.

மலகூடம் சென்றபின்பும், உணவு அருந்துமுன்பும், உணவு பரிமாற முன்பும் கைகளைச் சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுதல் வேண்டும்.

கீரைவகைகளைப் பலமுறை கழுவியும், அவித்தும் பழங்களை நன்கு கழுவியும், தோல் உரித்தும் உண்ணுதல் வேண்டும்.

சமைக்காத உணவுவகைகளான குளிர்பானம், ஐஸ்கிறீம், சர்பத் போன்றவற்றைத் தவிர்த்தல்.

வீட்டில் தயாரித்த உணவுகளை மாத்திரம் உண்ணுதல்.

சமைத்த உணவை உடன் உண்ணல், எஞ்சிய உணவைத திரும்பவும் நன்கு கொதிக்கவைத்து உண்ணல்.

உணவில் இலையான், தூசி படியாமல் மூடிவைத்தல். திறந்து விற்கப்படும் உணவுகளை வாங்கி உண்பதைத் தவிர்த்தல்.

குப்பை கூழங்களை உடனுக்குடன் அகற்றுவதன்மூலம் இலையான் உற்பத்தியாவதைத் தடுத்தல்.

நோயாளியைப் பராமரிப்பவர் தடைச்சிகிச்சை பெறுதலுடன் சிறந்த தற்சுகாதார நிலைமை பேணுதல்.

நோயாளி பாவித்த துணிகள், உபகரணம் ஆகியவற்றைத் தொற்றுநீக்கம் செய்தல்.

வாந்திபேதி நோயால் 90 வீதமானோர் சிறியளவில் பாதிக்கப்படுகிறார்கள். சிலர் அறிகுறிகளற்ற நோய்க்காவிகளாக இருந்து இந்நோயைப் பரப்பிக்கொண்டு இருப்பர். இதனால் இந்நோயைக் கட்டுப்படுத்த மக்கள் இந்நோய்பற்றிய அறிவுடன், விழிப்புணர்வுடன் செயற்படுதல் இன்றியமையாதது ஆகும்.

தவறும் பட்சத்தில் வாந்திபேதி நோய் எமது பகுதிக்குப் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்

பொதுமக்கள் தங்கள் சுகாதாரத்திற்குத் தாங்களே பொறுப்பு என்ற எண்ணத்துடன் செயற்பட்டு வாந்திபேதியை ஒழிக்க முயலுவோமாக - என்று அதில் கூறப்பட்டுள்ளது. (ஒ)

## 'ஹெலிரூர்ஸ்' பயணச்சீட்டுக்கு மீள்கொடுப்பனவு நாளை

### யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில்

யாழ்ப்பாணம்,செப்.5

கொழும்பு - யாழ்ப்பாணம் இடையே விமான சேவையை 'ஹெலிடூர்ஸ்' நிறுவனம் நடத்தியபோது அதில் பயணிப்பதற்காகப் பயணச்சீட்டினைக் கொள்வனவு செய்துவிட்டுப் பயணம் மேற்கொள்ளாதவர்கள் அந்தப் பயணச் சீட்டுக்கான பணத்தை மீளப்பெறாதிருந்தால், அதனை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் தமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தப் பயணச்சீட்டு மீள்கொடுப்பனவு முன்னர் பல்வேறு தடவைகளில் பலருக்கு வழங்கப்பட்டதாகவும் -

அந்தவகையில் இதுவே இறுதிச் சந்தர்ப்பம் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## ஜீ.சீ.ஈ. சாதாரணதர பெறுபேற்றில் பாடசாலைக் கணிப்பீடும் சேரும்!

### கல்வி அமைச்சுச் செயலாளர் அறிவிப்பு

அச்சுவேலி,செப்.5

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றில் பாடசாலை மட்டத்திலான கணிப்பீட்டுப் பெறுபேறும் 2002ஆம் ஆண்டில இருந்து சேர்த்துக்கொள்ளப்படவுள்ளது. ஜி.சீ.ஈ.உயர்தரம் கற்பதற்கு பாடசாலை மட்டக் கணிப்பீட்டில் திறமைச் சித்தி (சி) ஏற்றுக்கொள்ளப்படவுள்ளது.

தாய்மொழி, கணிதம் ஆகிய பாடங்களுக்குப் பெறவேண்டிய திறமைச் சித்திக்கு இது பொருந்தாது என கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளர் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் இந்தப் புதிய நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையின்படி கணிதம், தாய்மொழி ஆகிய பாடங்களில் எழுத்துப் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்ற மாணவர் கணிப்பீட்டுப் பெறுபேற்றில் பெற்றுக்கொண்ட திறமைச் சித்தியையும் பயன்படுத்தி உயர்கல்வியைக் கற்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றில் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் பரீட்சைப் பெறுபேறு ஒரு அட்டவணையிலும், பாடசாலை மட்டத்திலான கணிப்பீட்டுப் பெறுபேறு வேறான அட்டவணையிலும் பதிவுசெய்யப்பட்டு பரீட்சை முடிவு வெளியிடப்படவுள்ளது.

புதிய நடைமுறையின் பிரகாரம் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்துடன் பாடசாலையை விட்டு விலகும் மாணவர்களின் தொகை எதிர்காலத்தில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் கூடியளவு மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்பதற்கு, தாய்மொழி, கணிதம் உட்பட ஒரே தடவையில் ஐந்து அல்லது ஆறு பாடங்களில் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்தில் கற்பதற்கு உரிய பாடங்களில் இரண்டு திறமைச்சித்தி உட்பட குறைந்தது மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது. (ஒ-11)

### நாளை

ஆவணி 21
வெள்ளிக்கிழமை
(06.09.2002)
திதி : சதுர்த்தசி
முற்பகல் 11.36 வரை.
நட்சத்திரம் : மகம்
முன்னிரவு 10.05வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம் : 6.04 - 7.34
ராகுகாலம்: 10.34 - 12.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கடன் இல்லாத ஏழை கடன் உள்ள அரசனை விட மேலானவன்.

## குடாநாட்டில் இடம்பெற்ற கொள்ளைகளின் சூத்திரதாரிகள் யாழ்.பொலீஸாரிடம் சிக்கினர்!

யாழ்ப்பாணம்,செப்.5

குடாநாட்டில் ஆயுதமுனையில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் நேற்றுமுன்தினம் சுண்டுக்குளிப் பகுதியில் வைத்து யாழ்.பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.சென்பற்றிக்ஸ் வீதியில் கடந்த மாதம் 21ஆம் திகதி திருமண வைபவம் இடம்பெற்ற வீடொன்றில் பின்னர் கொள்ளையிடப்பட்டுப் பொருள்கள் சிலவற்றை நவாலியில் விற்க முயன்ற நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதாகவும் - அவர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே கொள்ளைக் கும்பல் சூத்திரதாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

ஆயுதமுனையில் இடம்பெற்ற பல கொள்ளைகளுக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் -

அவர்களிடம் சில ஆயுதங்கள் இருக்கலாம் என்றும் - சந்தேகிக்கப்படுகின்றது.

இந்த நபர்கள் தொடர்ந்து யாழ்.பொலீஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை -

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் தான் துப்பாக்கி, கைக்குண்டு முதலானவற்றை வைத்திருப்பதாகவும் -

தன்னைக் காட்டிக்கொடுப்போரைக் கொலைசெய்துவிடுவதாகவும் - கைதுசெய்வதற்கு முன்னர் பலரை மிரட்டி வந்ததாகவும் கூறப்படுகிறது. (ஒ-3-12)

## பலாலி அம்மன் கோயிலில் இருந்த பஞ்சலோக விக்கிரகங்கள் மாயம்!

அச்சுவேலி,செப்.5

பலாலி கிழக்கு இராசஇராசேஸ்வரி அம்மன் கோயிலில் இருந்து 9 பெறுமதிமிக்க விக்கிரகங்கள் காணாமற்போய்விட்டன.

1990ஆம் ஆண்டு பலாலியில் இருந்து பொதுமக்கள் இடம்பெயர்வதற்கு முன்னர் ஆலயத்தில் வைத்து பூசிக்கப்பட்டு வந்த பஞ்சலோகத்தினால் உருவாக்கப்பட்ட பத்து விக்கிரகங்களில் ஒன்பது விக்கிரகங்கள் காணாமற்போய்விட்டன.

ஒரு விக்கிரகம் மட்டுமே தற்பொழுது ஆலயத்தில் இருப்பதாக அறியப்படுகின்றது. இந்த விக்கிரகம் சாதாரணமாக எடுத்துச்செல்லமுடியாத நிறைகொண்டதாகவும் -

அழுக்குகள், செழும்பு படிந்து காணப்பட்டும் இருந்ததால் திருடர்கள் அதனை விட்டுச் சென்றிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

12 வருடங்களின் பின்பு ஆலயத்தை துப்புரவு செய்வதற்கு சென்ற பொதுமக்கள், பஞ்சலோகத்திலான விக்கிரகங்கள் இல்லாமல் இருப்பதுகண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

விக்கிரகங்கள் காணாமற்போய் இருப்பது பற்றி பலாலி வாழ்மக்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர் என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (ஒ-11)

## கடற்படை வழங்கிய நஷ்டஈடு

ஊர்காவற்றுறை,செப்.5

அண்மையில் நாரந்தனை கள்ளுத்தவறணையில் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலினால் ஊர்காவற்றுறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகையாக கடற்படையினரால் 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தாக்குதல் இடம்பெற்ற தினத்தன்று தவறணையில் களவு போனதாகக் கருதப்படும் விற்பனைப் பணம் ஆயிரத்து 400 ரூபா, அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவிருந்த கொள்வனவுப் பணம் 3ஆயிரத்து 250 ரூபா 44 சதம், கடற்படையினரால் நிலத்தில் சரித்து ஊற்றப்பட்டதாகக் கூறப்படும் கள்ளின் பெறுமதியான 7ஆயிரத்து 84 ரூபா மற்றும் காயமடைந்த சங்கப் பணியாளருக்குரிய வைத்தியச் செலவாக 13ஆயிரத்து 265 ரூபா 56 சதம் என்பவையே கடற்படையினரால் வழங்கப்பட்டதாகச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

அதேவேளை, கடற்படையினரின் தாக்குதலை அடுத்து மூடப்பட்டிருந்த மேற்படி கள்ளுத்தவறணை தற்போது மீளவும் செயற்படத் தொடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-16)

## பொ.ஐ.மு. மீண்டும் ஆட்சிக்கு வந்ததும்

# உள்நாட்டுக் கம்பெனிகளுக்கு விற்ற அரச நிறுவனங்கள் மீளப் பெறப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றார்

கொழும்பு,செப்.5

அரசைக்கவிழ்க்கும் நோக்கம் எதிர்க்கட்சிக்கு இல்லை. ஆயினும் தேவை ஏற்பட்டால் அதுகுறித்து யோசிப்போம். தற்போது அரசு திட்டமிட்டிருக்கும் தனியார் மயமாக்கலை எதிர்க்கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. நாம் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் உள்நாட்டுக் கம்பெனிகளுக்கு விற்கப்பட்ட அரச நிறுவனங்களை மீளப்பெறுவோம் என்று எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படுவது தொடர்பான கொள்கைப்பிரகடனம் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வெளியிடப்பட்டது. இப்பிரகடனம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, பொதுச் செயலாளர் திமு.ஜயரத்ன, கட்சி உறுப்பினர் நிஸ்ஸங்கவிதாரன ஆகியோர் விளக்கமளித்தனர்.

அரசிற்குச் சொந்தமான 14 சேவைகளும் நிறுவனங்களும் தனியார் மயமாக்கப்படும் அபாயம் உள்ளது. இதனை ஒருபோதும் எதிர்க்கட்சிகள் அனுமதிக்கமாட்டா. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சியில் இருந்தபோது சில தவறுகள் நடந்திருக்கலாம். அவற்றைத் திருத்திக் கொள்வதற்கு முயற்சி எடுப்பதில் தவறில்லை.

அரசியல் சட்டத்தின் 157ஆவது சரத்தின்படி வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்கப்பட்ட அரச நிறுவனங்களை அரசு மீளப் பெறமுடியாது. அவ்வாறு பெறுவதாயின் பெரிய தொகையை அபராதமாகக் கொடுக்க வேண்டும். இதுமிகவும் அபாயகரமானது.

ஆனால், உள்நாட்டுக் கம்பெனிகள் மீது இந்தச்சட்டம் இல்லை எனவே, தேவை ஏற்பட்டால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மீண்டும் ஆட்சிக்கு வந்தபின்பு உள்நாட்டுக் கம்பனிகளுக்கு விற்கப்பட்ட அரச நிறுவனங்களை மீளப்பெறுவோம்.

தனியார்மயமாக்கலுக்கு எதிரான முதல் நடவடிக்கையாகவே இப்பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக தொழிற்சங்க உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து முடிவுசெய்யப்படும்.

- இவ்வாறு அங்கு விளக்கிக் கூறப்பட்டது. (ம)

# தமிழர்களின் துயரங்களை ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்வது மாறவேண்டும்!

## ரூபவாஹினி நிகழ்வில் யாழ்.ஆயர் உரை

வடபகுதியில் நடைபெற்ற யுத்தக் கொடுமைகள், மக்கள்பட்ட துன்ப, துயரங்கள் என்பவற்றை வெளியுலகுக்குத் தெரியாதவகையில் வேண்டுமென்றே கடந்தகாலங்களில் சில ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்துவந்தன. இந்த நிலைமை மாற்றியமைக்கப் படவேண்டும். இவ்வாறு வலியுறுத்தினார் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

கடந்த திங்கட்கிழமை யாழ்செயலகத் தில் நடைபெற்ற ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் அலைவரிசை விஸ்தரிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே யாழ்.ஆயர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'வடபகுதி மக்கள் அனுபவித்து வந்த துன்ப, துயரங்கள தென்பகுதி மக்களுக்குச் சென்றடைவதில்லை. மாறாகத் தென்பகுதி மக்களின் மனங்களில் தமிழ்மக்கள் பற்றியும், அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற போராட்டம் பற்றியும் ஒரு தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில் சில ஊடகங்கள் முனைப்புடன் செயற்பட்டன.

'இதனால் இனங்களுக்கிடையே இடைப்பகைமை வரை இடமளித்தன. இந்நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

'தமிழ்மக்களில் கலை, கலாசாரம் சம்பந்தமாக இங்கு நடத்தப்படுகின்ற நிகழ்வுகளை தென்பகுதி மக்களிற்குத் தெரியப்படுத்துவதன்மூலம் அவர்களின் மனத்தை வெற்றிகொள்ளமுடியும். இதன்மூலமே இரு சமூகங்களிடையே புரிந்துணர்வுடனான பரஸ்பர உறவை வளர்க்கமுடியும். இதற்கு ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் நடுநிலையுடன் செயற்படவேண்டியது இன்றியமையாததாகும்.

'தென்பகுதியைப் பொறுத்தவரை பல்வேறு ஒளி, ஒலிபரப்பு ஊடகங்கள் நிறுவப்பட்டு செய்திகள் உடனுகுடன் பரிமாறிக்கொள்ளப்பட்டுவருகின்றன. இதேபோல வடபகுதியிலும் குறிப்பாக கொக்காவில் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுமதியுடன் ஒரு கலையகத்தை அமைப்பதற்கு ரூபவாஹினி கூட்டுத்தாபனம் முன்வரவேண்டும்.' என்றார் அவர். (ஓ-ரி)

### நாளை முடிவு

கொழும்பு,செப்.5

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மற்றும் அவரது மனைவி பயன்படுத்திய வங்கிப் பெட்டகங்களில் நூலரைக் கோடி ரூபா பெறுமதிக்கு வைப்புச் சான்றிதழ்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்தும் பொறுப்பை லஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பதா என்பது குறித்து நாளை வெள்ளிக் கிழமை கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் முடிவு செய்யவிருக்கின்றது. (ம)

### துணைவேந்தரின் கார் விடுவிப்பு

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் தடுத்துவைக்கப்பட்டிருந்த துணைவேந்தரின் கார் கடந்த சனிக் கிழமை விடுவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து மாணவர்கள் காரை விடுவித்தனர்.

கடந்த ஜூன் மாதம் மாணவர் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் கையாளும்விதம் உட்படத் துணைவேந்தரின் சில செயற்பாடுகளைக் கண்டித்து அவரின் காரை மாணவர்கள் தடுத்துவைத்திருந்தனர். (ம-10-ரி)


## தேவை

மெசின் மைண்டர் தேவை.
திருமால் அச்சகம்
393, K.K.S. வீதி,
(7909) யாழ்ப்பாணம்.



## வாழ்த்துகின்றோம்

05-09-2002



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் முருகன் வளவு, கச்சாய் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்டவரான

### திரு.பொ.நவரத்தினம்

அவர்கள் இன்று (05.09.2002) வியாழக்கிழமை தனது 75ஆவது பிறந்த தினத்தை அவரது இல்லத்தில் மகிழ்வுடன் கொண்டாடுகின்றார். 75ஆவது அகவை காணும் இவரை நீடூழி வாழ்கவென மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

"முருகன்வளவு",
கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (7878)



## முதலாவது வருட நினைவஞ்சலி



பிறப்பு 25 - 09 - 1936

இறப்பு 16 - 09 - 2001

### திருமதி துரைஐயா பரமேஸ்வரி

அன்பும் பண்பும் நிறைந்த எங்கள் ஆருயிர் அம்மாவே!
ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள் மறையாது!
தன் பாதத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு வண்ணை ஸ்ரீகாமாட்சி
அம்பாளை நாங்கள் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி!
இன்று அவரது அஞ்சலி நிகழ்வுகள் வள்ளியில் நடைபெறும்.

தகவல்:
திருமதி கண்ணா மகேந்திரன்,
82, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.
(7829)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திருமதி ஜெயலஷ்மி சிவசுப்பிரமணியம்

(விவசாயப் போதனாசிரியர், உடுவில்)

அகவை 60இல் ஓய்வுபெறும் அன்னாரின்
தன்னிகரில்லாச் சேவைகளை நன்றியுடன் நினைவு கூர்ந்து,
அவர் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(7872) - சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனம்.



## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 - 04 - 1952



மறைவு 19 - 08 - 1998

### சிவகுருநாதன் சரஸ்வதி

அம்மா எனும் ஆருயிரே இன்னமுதே!
அன்புடனே எம்மை வாழவைத்த தாயே!
ஆண்டுகள் நான்கு சென்றாலும் உங்களது
நினைவுகள் என்றும் எமை விட்டு அகலாது.

உங்களது பிரிவால் துயருறும்:
கணவர்,
பிள்ளைகள்.

கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு. (7811)



## நீங்காத நினைவில் ஓராண்டு



### அமரர் சின்னக்குட்டி சின்னத்தம்பி

மண்ணில் 15-01-1937

விண்ணில் 18-082001

பாசத் தலைமகனைப் பறித்த இடப்பெயர்வு
நெஞ்சில் பதித்த நீங்காத சோகவடு
ஓராண்டு காலமென்ன ஒரு யுகம்தான் சென்றாலும்
நீங்குமோ எங்கள் நெஞ்சங்களைவிட்டு?

கரம்பைக்குறிச்சி,
வரணி. (7905)

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### கிருஸ்ணபிள்ளை கணேசமூர்த்தி

(ஓடி கணேசு)

பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை கணேசமூர்த்தி அவர்கள் நேற்றுமுன்தினம் (03.09.2002) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - பூரணம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவகுரு - இரத்தினத்தின் அன்பு மருமகனும் கமலராணியின் அன்புக் கணவரும் கருணாகரன் (சுவிஸ்), கிருபாகரன் (கனடா), டயாகரன் (கனடா), வலாகரன் (கனடா), புஸ்பாகரன், துர்மதி, கலைமதி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் நாகராசா, பரமேஸ்வரி, தனலட்சுமி, இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் சாந்தகுமார், விசயகுமார், லட்சுமிதேவி (இந்தியா), சிவகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் நவரத்தினம், சிவபாதம், பிரபாகரன், கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி: க.கமலராணி,
பிள்ளைகள், சகோதரர்கள்.

பத்தமேனி,
அச்சுவேலி. (7912)



யாழ்.ஆயர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் பங்கேற்ற கனடாவின் ஒன்ராறியோ மாநில முன்னாள் முதலமைச்சர் பொப் றே, கனேடிய உயர் ஸ்தானிகராலய அதிகாரி போல் கறோ, யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவின் பிரதிநிதிகள் வண.பிதா ஏ.ஐ.பேர்ணாட், சு.பரமநாதன், சி.விக்னேஸ்வரன் ஆகியோரைப் படத்திற் காணலாம்.

# சமாதானத்தை அடைய இதுவே இறுதி சந்தர்ப்பம்

## (இங்குவந்த கனேடிய மாநில முன்னாள் முதல்வர் தெரிவிப்பு)

யாழ்ப்பாணம்,செப்.5

ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு அரசும், விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் சமாதான நல்லெண்ண நடவடிக்கைகள் வரவேற்புக்குரியவை. இதன்மூலம் இரு தரப்பும் ஒன்றிணைந்து ஓர் உறுதியான சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும். இதற்கான கடைசிச் சந்தர்ப்பமும் இதுவே.

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ். ஆயர் இல்லத்தில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவைச் சந்தித்துப் பேசிய கனடா, ஒன்றாறியோ மாநில முன்னாள் முதல்வர் பொப் றே (Bob Rae) தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழர்கள் ஒரு தனி மாநிலமாக வாழ்வதற்கு எந்த வகையில் ஆதரவு கிடைக்கும் என்பது எனக்குத் தெரியாது. ஆனாலும் பல நாடுகளில் இவ்வாறான சமஷ்டி முறையிலான ஆட்சி நடைபெறுகின்றது.

"கனடாவும் சமஷ்டி ஆட்சி உள்ள ஒரு நாடு. பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய இருமொழிகளைக் கொண்ட இரு இனங்கள் அங்கு உள்ளன. பிரெஞ்சு மொழி கனடாவில் உள்ள ஒரு மாநிலத்தின் உத்தியோகபூர்வமான ஒரு மொழியாக உள்ளது.

"சமஷ்டி ஆட்சி என்பது அதிகாரங்கள் குறைந்த ஆட்சியல்ல. கிட்டத்தட்ட 25 நாடுகள் சமஷ்டி ஆட்சி முறைமூலம் திறமையான நிர்வாகத்தை நடத்திவருகின்றன. இரு இனங்களிடையேயான உண்மையான நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வே சமஷ்டி ஆட்சியின் அச்சாணிகள்" - என்றார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவினர் கருத்துத் தெரிவிக்கையில்:-

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரும் யாழ்.குடாநாட்டு மக்களின் வாழ்க்கை இயல்புநிலையை அடையவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர்தான் பல புதிய பாதுகாப்பு வலயங்கள் தோன்றியுள்ளன.

இதனால் பொதுமக்களின் வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பாடசாலைகளில் இருந்து வெளியேறிய படையினர் அருகில் உள்ள கட்டடங்களில் நிலைகொள்வதால் மாணவர்களும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

தமிழ்மொழி அரச கரும மொழியாக இருந்தும் பல சுற்றறிக்கைகள் யாழ்ப்பாணத்திற்குத் தனிச்சிங்கள மொழியிலேயே அனுப்பிவைக்கப்படுகின்றன. இதனால் எழுத்தளவிலேயே அரச கரும மொழியாகத் தமிழ் உளளது எனத் தெரிவித்தனர்.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் தலைவர் டி.ஆர்.அருளைநாயகம் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் கனேடிய முன்னாள் முதலமைச்சருடன் பேராசிரியர் பீற்றர் மைக்சன், கனேடிய உயர் ஸ்தானிகராலய அதிகாரி போல் கறோ ஆகியோரும், யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை, வண. பிதா ஏ.ஐ.பேர்ணாட், வண.பிதா எஸ். ஜெபநேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை யாழ். பல்கலைக்கழகத்திற்கு கனேடிய முன்னாள் முதலமைச்சரும் அவருடைய குழுவினரும் விஜயம் செய்தனர். (ம-8)

### வன்னி, மட்டு மாவட்ட மக்களை

# வாக்களிக்கவிடாது தடுத்தமைபற்றி விசாரிக்க உயர்நீதிமன்று முடிவு!

கடந்த பொதுத் தேர்தலின்போது வன்னி, மட்டக்களப்பு மாவட்டங்களில படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்கள், கட்டுப்பாட்டுப் பகுதியில் தங்களுக்காக அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடிகளுக்கு வந்து வாக்களிக்கவிடாது தடுக்கப்பட்டமை, சம்பந்தப்பட்ட வாக்காளரின் அடிப்படை உரிமைகளை மீறிய செயலா? என்பது குறித்து ஆராய உயர் நீதிமன்றம் முடிவு செய்திருக்கின்றது.

விடுவிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த ஆறு வாக்காளர்கள் இது தொடர்பாகத் தாக்கல் செய்த மனுவை ஆராய்வதென உயர்நீதி மன்றம் கடந்த திங்களன்று தீர்மானித்துள்ளது. இம்மனுதாரர்கள் வாகரை, முல்லைத்தீவு வன்னிப் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் காரணமாக தங்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதால் இம்மாவட்டங்களில் புதிதாகத் தேர்தல் நடத்தப்பட உத்தரவிடவேண்டும் என்று அவர்கள் மனுவில் நீதிமன்றத்தைக் கோரியிருக்கின்றனர். (ம)

### கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுமி மரணம்!

கிணற்றுக் கப்பியில் சிக்குண்ட கயிற்றைக் கழற்ற முற்பட்ட சிறுமி தவறி கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்தார்.

கடந்த ஞாயிறு மாலை 6 மணிக்கு, கரணவாய் தூதாவளை என்ற இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வைகுந்தவாசன் சுமதி (வயது9) என்ற சிறுமியே மரணமானவராவார்.

மந்திகை மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்ட இவரது சடலம் மறுநாள் அங்கு இடம்பெற்ற பிரேதப் பரிசோதனை, மரணவிசாரணையை அடுத்து உறவினரிடம் ஒப்படைக்கப் பட்டது. (ம-15)

# சாதனை படைத்த மாணவர்களுக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள்

காரைதீவு,செப்.5

கடந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களுக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன. பிராந்தியக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு இதற்கான விண்ணப்பங்களைக் கோரவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை வெளிவரும் அரச வர்த்தமானியில் இது பற்றிய விவரங்கள் வெளிவரும் எனத் தெரிகிறது.

ஜப்பான், சீனா, இந்தியா, ரஷ்யா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஈராக் ஆகிய நாடுகளிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் ஒக்ரோபர் 7ஆம் திகதியாகும். இப்புலமைப் பரிசிலுக்கு மேலதிகமாக மேற்படி அமைச்சு 100 மாணவர்களுக்கு மாத உதவித்தொகை வழங்கிவருகிறது. உயர்பெறுபேறு பெற்ற மாணவர்கள் 100 பேருக்கு மருத்துவம், பல் மருத்துவம், பொறியியல், வர்த்தகம், கணக்கியல் போன்ற துறைகளில் அனுமதிக்கப் படுவார்கள். வெளிநாட்டுப் புலமைப் பரிசிலுக்காகக் கூடியதொகை வழங்கப்படுவது இதுதான் முதற்றடவை. (ம)

# கடற்படைத் தளபதியின் உயிருக்கு அச்சுறுத்தலாம்!

கொழும்பு,செப்.5

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமும், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடமும் கடிதங்கள்மூலம் அறிவித்திருக்கிறார்.

தனது பதவிக்காலம் அண்மையில் நீடிக்கப்பட்டதையடுத்தே இந்த அச்சுறுத்தல் எழுந்துள்ளதாக சந்தகிரி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் பங்குபற்றிவிட்டு நாடுதிரும்பிய கடற்படைத்தளபதி உடனடியாக இந்தக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

கடற்படைக்குச் சொந்தமான ஜி.எவ். 6943 இலக்க - மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் தயா சந்தகிரியின் வீட்டை வீடியோப் படம் பிடித்ததாகவும் -

வீட்டுக் காவலர்கள் அவர்களைக் கலைத்துப் பிடிக்க முயற்சித்தபோதும், அந்த இரண்டு மர்ம நபர்களும் மாயமாகிவிட்டார்கள் என்றும் -

தயா சந்தகிரியின் வீட்டின் பிரதம பாதுகாவலர் வியாங்கொட பொலீஸில் அளித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் கடற்படைத்தளபதி எழுதிய கடிதங்களை அடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளுக்குரிய கடற்படை உத்தியோகத்தரை பொலீஸார் விசாரணை செய்துள்ளனர். (ம)

# விதிகளை மீறிய பதவியுயர்வுகளால் பொலீஸ் துறைக்குள் புகைச்சல்!

**இலங்கைப் பொலீஸ் வரலாற்றில் என்றுமில்லாதவாறு உருவாகியுள்ளதாகக் கூறப்படும் பதவிப் போட்டி குறித்து 'லக்பிம' வார இதழில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கத்தின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளிவந்தது. மிகுதி இங்கு பிரசுரமாகிறது.**

எப்படி இருந்தபோதும், பொலீஸ்மா அதிபராக பதில் கடமையாற்றுவதற்கு, இன்னொரு தடவையும் ஆனந்தராஜாவே நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு காலமானதைத் தொடர்ந்து அடுத்த பொலீஸ்மா அதிபராக ரீ.ஈ. ஆனந்தராஜாவையே நியமிக்குமாறு கேட்டு தமிழ்க்கட்சிகளால் அனைத்து அமைச்சர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நாட்டின் பௌத்த மதத் தலைவர்களதும், பொதுமக்களினதும் விருப்பம் பொலீஸ்மா அதிபராகக் கொட்டகதெனிய நியமிகப்படல் வேண்டும் என்பதே.

எப்படி இருந்தபோதும் கொட்டகதெனியவை குறுகிய காலத்துக்காயினும் பொலீஸ்மா அதிபராக நியமிக்க வேண்டுமென்பது பொலீஸ் சேவையின் கீழ்மட்ட உத்தியோகத்தர்களில் பெரும்பான்மையோரின் விருப்பமாகும்.

சேவையிலுள்ள உயர் மட்டப் பொலீஸ் அதிகாரிகள் மேற்கொள்ளும் குற்றங்களை வெளிப்படுத்தி அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுத்து பொலீஸ்மா அதிபர் பதவியின் கௌரவத்தை நிலைநாட்டக் கூடிய திறமையும் தேவையும் கொட்டகதெனியவிடம் உள்ளன என அவர்கள் நம்புவதே இதற்கான காரணமாகும்.

பொலீஸ்மா அதிபரை நியமிக்கும் அரசமைப்பு ரீதியிலான அதிகாரம் படைகளின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கே உரியது. அதன் பிரகாரம் அடுத்து பொலீஸ்மா அதிபர் யாரென ஜனாதிபதியே தீர்மானிப்பார் என உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார்.

கொட்டகதெனியா இப்போது தனது 60ஆவது வயதைப் பூர்த்தி செய்துள்ளார். கடந்த மார்ச் மாதம் முதல் ஆறுமாத காலத்துக்கு அமைச்சரவையினால் வழங்கப்பட்ட விசேட சேவைநீடிப்பு உத்தரவுக்கமையவே இப்போதும் அவர் சேவையாற்றுகின்றார். அதன் பிரகாரம் இம்மாதம் 16ஆம் திகதியுடன் அவருக்கு வழங்கப்பட்ட சேவைநீடிப்பு முடிவடைகிறது.

ஆகவே, எதிர்வரும் சில தினங்களுக்கு பொலீஸ்மா அதிபர் பதவிக்கு கொட்டகதெனியாவை நியமனம் செய்வது உசிதமானது என்பது பலருடைய கருத்தாகும்.

அதன் பின்னர் காலியாகும் வெற்றிடத்துக்கு ரீ.ஈ.ஆனந்தராஜா நியமிக்கப்படுவார்.

அவருக்கு இப்போது 59வயது பூர்த்தியாகிறது. அவருக்கு பொலீஸ்மா அதிபர் பதவி வழங்கப்படாவிட்டால் இன்னும் ஓராண்டு காலத்தில் அவர் சேவையிலிருந்து ஓய்வுபெற வேண்டி ஏற்படும். அதன் பின்னர் பொலீஸ்மா அதிபராக பதவி பெறத் தகுதியுடையவர் சேவைமூப்பின் அடிப்படையில் உள்ள சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஒருவராகும்.

ஆயின், அதன்பின்னர் சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் தரத்தில் தற்போது பொலீஸ் திணைக்களத்தில் எவரும் சேவையாற்றவில்லை.

சேவைமூப்பின் அடிப்படையில் ஒரே தரத்தைச் சேர்ந்த பிரதிப் பொலீஸ்மா அதிபர்களாக நால்வர் தற்போது பொலீஸ் சேவையில் கடமையாற்றுகின்றனர். சந்திரா பெர்னாண்டோ, காமினி ரன்தெனிய, இந்திரா டி சில்வா, ஜயதிஸ்ஸ ஹேரத் ஆகியோரே அவர்களாவர். சேவைமூப்பின்படி அவர்கள் ஒரே தரத்தில் தற்போது கடமைபுரிகின்றனர்.

ஆனால், அடுத்த பொலீஸ்மா அதிபராக ஆவதற்குரிய தகுதிகள் இவர்கள் எல்லோரிடத்தும் இல்லையெனக் கூற இயலாது.

இதனிடையே இந்திரா டி சில்வா, ஜயதிஸ்ஸ ஹேரத் ஆகிய இரு பிரதிப் பொலீஸ்மா அதிபர்களையும், சந்திரா பெர்னாண்டோ, காமினி ரன்தெனிய ஆகிய பிரதிப் பொலீஸ்மா அதிபர்களைவிட உயர் சிரேஷ்ட தரத்தில் அரச சேவை ஆணைக்குழு தரப்படுத்தியுள்ளது.

இத்தரப்படுத்தலுக்கெதிராக காமினி ரன்தெனியவும், சந்திரா பெர்னாண்டோவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அவர்கள் தமது மனுவில் தம்மை விட உயர்ந்த தரத்தில் தரப்படுத்தப்பட்டிருக்கும் மற்றிரு பிரதிப் பொலீஸ்மா அதிபர்களும் தமது சேவையின் பெரும்பகுதியை பொலீஸ் தலைமைக் காரியாலயத்திலேயே கழித்ததாகச் சுட்டிக்காட்டியிருந்தனர். நாமிருவரும் நாட்டின் பல பகுதிகளில் கடமையாற்றியதோடு, பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது என்பதனையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எந்தவொரு பொலீஸ் அதிகாரியாவது தரப்படுத்தலில் முன்னிலைப் படுத்தப்படுவதற்கு மேற்கூறிய விடயங்களும் கணக்கில் கொள்ளப்பட வேண்டுமென்று சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்காரணமாக மீண்டுமொரு முறை சந்திரா பெர்னாண்டோவும் காமினி ரன்தெனியவும் முன்னர் போன்று மற்றிரு பிரதிப் பொலீஸ்மா அதிபர்களுக்கு இணையான தரத்தில வைக்கப்படவேண்டுமென நீதிமன்றம் அரசசேவை ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

எப்படியிருப்பினும், பொலீஸ் உத்தியோகத்தரொருவர் சிரேஷ்ட தரத்துக்கு நியமிக்கப்படுவதாயின், தன் கடைசி ஐந்தாண்டு சேவைக்காலத்தின்போது எதுவித குற்றச்சாட்டுக்களுக்கும் உட்படாதிருத்தல் வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய அதிகாரிகளில் சந்திரா பெர்னாண்டோவுக்கு எதிராக 1990ஆம் ஆண்டில் மட்டக்களப்புப் பிரதேசத்தில தேர்தல் வாக்களிப்புக் குளறுபடிகளில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப் பட்டது. இக்குற்றச்சாட்டுக்களின் பேரில் நீதிமன்ற விசாரணைகளும் இடம்பெற்றன. இதுவரையில் அவ்விசாரணையின் தீர்ப்பு வெளியிடப்படவில்லை.

எப்படியிருப்பினும் கொட்டகதெனியவுக்கும் ஆனந்தராஜாவுக்குமிடையே ஏற்பட்டுள்ள போட்டியில் வெளியில் வராத வகையில் மேலும் பல சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருப்பதாக மேற்குறிப்பிட்ட காரணங்களைக் கொண்டு அறிய முடிகிறது. 135 ஆண்டுகள் பொலீஸ் வரலாற்றில் பொலீஸ்மா அதிபர் பதவிக்கு இதுபோன்ற போட்டி இருந்திருக்குமா என்பது சந்தேகமே. ☆

# செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு 46 பேருக்கு சந்திக்க அழைப்பு

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி 46 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அவர்களது பெயர் விவரம் வருமாறு:-

வீரசிங்கம் தவமணி (ராஜேஸ்வரி)- கொடிகாமம், விஜயராஜா பரமேஸ்வரி - யாழ்ப்பாணம், அன்ரன் கொன்ஸ்டன்டைன் டொரத்தி(சறோ) - யாழ்ப்பாணம், செல்வரத்தினம் புனிதமலர் - யாழ்ப்பாணம், வேலாயுதம் புவனேஸ்வரி - மருதனார்மடம், செ.சேவியர்தாஸ் - யாழ்ப்பாணம், ரகுமான் டொறீன் - குருநகர், சிவலிங்கம் சடாச்சரம்மா - செம்பியன்பற்று, கொன்ஸ்டன்டைன் பரணிதேவி - செம்பியன்பற்று, குமாரவேல் அமிர்தலிங்கம் (ஐயக்கோன்) - நாவற்குழி , துரையப்பா மாணிக்கவாசகர் - சாவகச்சேரி, சண்முகம் ரதியழகன் - நாகர்கோவில், கணபதிப்பிள்ளை கந்தசாமி - நாகர்கோவில், குணசிங்கம் அருள்மொழி(அருள்) - பருத்தித்துறை, சின்னத்தம்பி பொன்னம்பலம் - தாழையடி, சின்னப்பு லோறன்ஸ் - குருநகர், பாலகிருஷ்ணன் சறோஜாதேவி - தாழையடி, தியாகராஜா மஞ்சுளகுமார் - நவாலி, துரை தேவராஜா - சுன்னாகம், தவேந்திரன் மரியா ஜ"சிஸ்டா - சங்கானை, கிறீற்றோ மிக்கேல் - பளை, முத்துலிங்கம் செல்வராணி - சுழிபுரம், செவத்தி சூசானம் - இளவாலை, சந்தியாப்பிள்ளை அருளானந்தம் - இளவாலை, ஞானபிரகாசம் சவரிமுத்து - இளவாலை, இன் னாசிமுத்து லொயாலா - இளவாலை, பாஸ்கரன் மேரி ஜெயராணி - இளவாலை, மரியான் சூசைப்பிள்ளை - இளவாலை, விக்னேஸ்வரன் ராகினி - திருநெல்வேலி, முத்துராஜா மேரி ஹில்டா - கொழும்புத்துறை, சின்னத்தம்பி ரஞ்சிதமலர் - திருநெல்வேலி அல்லது பளை, முருகுப்பிள்ளை ராஜேந்திரன் - மிருசுவில், நடராசா சிவஞானம் - கோணடாவில், வடிவேலு அருமைநாயகம் - செம்பியன்பற்று, குமாரசாமி சிவநாதன - நாவாந்துறை, கொலின்ஸ் கீதா - குருநகர், சாந்தலிங்கம் மேரி - நாவற்குழி, பரம்சோதி செல்வராஜா - சுழிபுரம, சண்முகரத்தினம் பரமேஸ்வரி - மானிப்பாய், சண்முகம் மதியழகன் - தாழையடி, ராசரத்தினம் சிவமணிதேவி - பளை, மாணிக்கம் விக்ரோரியா - கோண்டாவில், த.சுந்தரலிங்கம் - வல்வெட்டித்துறை, ஞானேஸ்வரன் கீதா - கரவெட்டி, செல்லத்துரை செல்வராணி - யாழ்ப்பாணம், செலவரததினம் மேரி அஜந்தா - பருததித்துறை. (ஒ)

# அடகுவைக்க கொண்டுசென்ற தங்க நகைகள் அபகரிப்பு!

## மினிபஸ்ஸில் திருடர் கைவரிசை

ஊர்காவற்றுறை.செப்.5

யாழ்.தட்டாதெருச் சந்தியில் இருந்து யாழ்பஸ் நிலையம் நோக்கி சென்ற மினிபஸ்ஸின் பயணம் செய்த பெண் ஒருவர் தனது கைப்பையினுள் வைத்திருந்த சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை பறிகொடுத்துள்ளார்.

காரைநகர் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு தங்க நகைகளைப் பறிகொடுத்தவராவார்.

இவர் தனது சகோதரனின் பணத் தேவை கருதி சுமார் 12 பவுண் உடைய தனது தாலிக்கொடியையும், சுமார் 04 பவுண் பெறுமதிக்கத்தக்க கைச்சங்கிலியையும் உறவினர் ஒருவரிடம் அடகு வைக்கும்பொருட்டு எடுத்துச் சென்றவேளையிலேயே இவ்வாறு பறி கொடுத்துள்ளார்.

மினி பஸ்ஸினுள் மிகுந்த சன நெருக்கடியைப் பயன்படுத்தி திருடர்கள் இவரது கைப்பையை வெட்டி அதனினுள் இருந்த மேற்படி நகைகளை லாவகமாகத் திருடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-16)

# நுளம்பை ஒழித்து டெங்கைத் தடுப்போம்!

**குடாநாட்டில் டெங்கு காய்ச்சல் பரவி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந் நோய் பரவாது தடுப்பது தொடர்பாக யாழ்.மருத்துவபீட சமுதாய மருத்துவத்துறையினர் வெளியிட்டுள்ள அறிவுறுத்தல் இங்கு பிரசுரமாகிறது.**

டெங்குக் காய்ச்சல் ஒரு வைரஸ் நோயாகும். இந்நோய் தற்போது யாழ்ப்பாணத்தில் பொதுவாகக் காணப்படும் சில நுளம்புகளால் பரப்பப்படுகின்றது.

இந்த வைரஸ் நோய்க்கு மருந்து ஏதும் கிடையாது. ஆகவே, இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்குரிய சிறந்தவழி நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதும், நுளம்புக் கடியிலிருந்து மனிதர்களைப் பாதுகாப்பதுமாகும்.

இந்த நுளம்பு பறக்கும் தூரம் 50 மீற்றர் அளவேயாகும். அத்துடன் இவை ஒவ்வொரு வீட்டுச் சுற்றாடலிலுள்ள நெருக்கமான பற்றைகளில் தங்குகின்றன. ஆகவே, வீட்டைச் சுற்றி கிட்டத்தட்ட 100 - 200 மீற்றர் வரையுள்ள பற்றைகளை அழிப்பதன் மூலம் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

இந்த நுளம்புகள் வழமையாக மாலைவேளைகளில் 5 - 8 மணிவரையிலும் காலை வேளைகளில் 6 - 8 மணிவரையுமுள்ள காலங்களில் மனிதர்களைக் கடிக்கின்றது. விசேடமாக டெங்குக் காய்ச்சல் பரவிவரும் காலங்களில் இந்நேரங்களில் வெளியில் உலாவுவதைக் கூடியளவு தவிர்த்தல வேண்டும்.

டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள், கைவிடப்பட்ட சிறிய பாத்திரங்கள், குவளைகள், சிரட்டைகள், உடைந்த போத்தல்கள், பாவனைக்குதவாத ரயர்கள், பாவனையற்ற நீருள்ள மீன் வளர்ப்புத் தொட்டிகள் போன்ற இடங்களில் முட்டையிட்டுப் பெருகுகின்றன. மழைவரும் காலங்களில் தடைப்பட்டுள்ள தாழ்வாரப் பகுதிகள், மரப்பொந்துகளிலும் நுளம்புகள் முட்டையிட்டுப் பெருக்கமடைகின்றன. மழைகாலம் தொடங்கவிருப்பதால் டெங்குக் காய்ச்சல் பரவுவதற்குச் சந்தர்ப்பங்கள் உருவாகும்.

குளியலறைகளில் உள்ள நீர்த் தொட்டிகளில் தேங்கியிருக்கும் நீரிலும் நுளம்புகள் பல்கிப் பெருகும்.

எனவே, பாவனைக்குதவாத தேங்கியிருக்கும் நீரை அகற்றியும், எரியக் கூடிய பொருள்களை எரிப்பதுடனும் அன்றாடம் நீருள்ள பெரிய பாத்திரங்களின் நீரை வெளியேற்றி புதிய நீரை நிரப்பி வைத்தலிலும் கூடிய கவனம் எடுக்கவேண்டும்.

நுளம்பு வலையினைப் பாவித்தும், நுளம்புச் சுருள்களை எரித்து நுளம்புகளைக் கலைத்தும் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாத்துக் கொண்டால் டெங்குக் காய்ச்சல் தொற்றிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

நுளம்பு கடித்து 4 - 6 நாள்களில நோயின் அறிகுறிகள் தோன்றலாம்.

**பொதுவான அறிகுறிகள்**

☆ தலையிடி, தசை நார்கள், மூட்டுக்கள் என்பவற்றில் தளர்த்தமுடியாத நோவு, தோலின் கீழ் சிவந்த புள்ளிகள்.

☆ சிலருக்கு இப்படியான குணம் குறிகள் காணப்பட்டுக் குணமடையலாம்.

☆ சிலசமயம் மூக்கில் நரம்புகள் உடைந்து இரத்தம் வடிதல், குடலில இரத்தக் கசிவேற்பட்டு வெளியேறல் போன்றவை ஏற்பட்டு 2 - 7 நாள்களில குறையலாம்.

☆ சிலருக்குக் குருதியமுக்கம் குறைவடைவதுடன், பதகளிப்புடன் இரத்த வாந்தி ஏற்பட்டு டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படலாம். இந்நிலையில் தீவிர சிகிச்சை பெறாவிடில் 12 - 24 மணி நேரத்திற்குள் நோயாளிக்கு மரணம் சம்பவிக்கலாம்.

இத்தகைய அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறவேண்டும். ★


# சேவை நலன் பாராட்டு



## திரு.இலங்கையர் கணேசன்

(பிரதிக் கல்விப் பணிப்பாளர். தென்மராட்சி வலயம்)

நல்ல ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக, முகாமைத்துவ ஆலோசகராக உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, தென்மராட்சியில் தனக்கென ஓர் இடத்திலிருந்து கல்விப் பயிரை வளர்த்த பெருந்தகையின் சேவைதனை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், பா.அ.சங்கம், பழைய மாணவர் சங்கம்.**

*யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.* (7937)

# சுருவில் அன்னை மரி ஆலயப் பெருவிழா - புரட்டாதி 08

திரிதின ஆராதனைகள் இன்று (05.09.2002) வியாழக்கிழமை ஆரம்பமாகி தினமும் மாலை 5.00 மணிக்கு நடைபெறும். 08.09.2002 ஞாயிறு காலை 8.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி இடம்பெறும் என்பதையும் பக்தர்களுக்கு அறியத் தருகின்றோம்.

*சுருவில்,*
*ஊர்காவற்றுறை.* (7940) **- பங்குக்குரவர்.**

சிரமத்தைத் தவிர்த்து உடனேயே இணைப்புடன்
செல்லிடத் தொலைபேசியைப் பெற

# Dialog GSM

## The Phone Shop

(கைலாசபிள்ளையார் கோயில் முன்பாக)
கோயில் வீதி, நல்லூர்.
ஏகவிநியோகஸ்தர்:

## யசோ ஆட்ஸ் பிளாஸ்ரிக்

35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
*HAND PHONE NO. - 077-110610*
(எமது விற்பனை நிலையத்தில் வாங்கும் போன் சிட்டைகளுக்கு விசேட சலுகைகள் உண்டு).
(7938)


# யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

**பதிவு இலக்கமும் திகதியும்: ஜே/1639 - 12.05.1976**

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் அனைத்துக் கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளன. இது தொடர்பாக வாக்களிக்கத் தகுதிபெற்ற உறுப்பினர் பட்டியல்கள் 2002.09.07ஆம் திகதியிலிருந்து 2002..09.14ஆம் திகதிவரையுள்ள 08 நாள்களுக்கு கிளைகளிலும் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். இவ்வாக்காளர் பட்டியல் தொடர்பாக மேன்முறையீடுகள் அல்லது ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் உறுப்பினர்கள் 21.09.2002ஆம் திகதிக்குப் பிந்தாது மேற்படி சங்கப் பணிமனைக்கு எழுத்துமூலம் கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்படி முழுத்தகைமை பெற்ற உறுப்பினர்கள் மட்டுமே கிளைப்பொதுச்சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்கவோ, வாக்களிக்கவோ உரிமை பெற்றவர்களாவர். (முழுத்தகைமை பெற்ற உறுப்பினர் என்பது உறுப்பினர்களாகச் சேர்ந்த திகதியிலிருந்து ஓராண்டு காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்தவரும், ஒரு முழுப்பங்கு ரூபா 100/=ஐ செலுத்தி முடித்தவருமான ஓர் உறுப்பினரைக் குறிக்கும்)

கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதி, இடம் மற்றும் நிகழ்ச்சிநிரல் என்பன தொடர்பான அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

நா.இராசகுரு
செயலாளர்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து).

04.09.2002 (சி-23680)


# யாழோசை இன்னிசை வார்ப்புகள்

இலங்கை - இந்தியக் கலைஞர்களின் கூட்டுறவில்
வண்ண மேடையில் ஒலி, ஒளி ஜாலப் பின்னணியில்
இசை - உங்கள் "வானிசைத் திலகம்" M.மோகன்ராஜ்
"தாய்மடியே" புகழ் - திப்பு
"பொம்பளைங்க காதலைத்தான் நம்பிவிடாதே"
புகழ் - மாணிக்கவிநாயகம்.
"வை ராஜா வை" புகழ் - சாலினி
என இந்தியக் குயில்களுடன்
A.E.மனோகரன் B.A. மற்றும் பல
இலங்கைக் குயில்களுடன்
SAKTHI - FM, SAKTHI T.V. அறிவிப்பாளர்களும்
"அப்ஸராஸ்" இசைக்குழுவினருடன் இணைந்து
உங்களுக்கு வழங்கும்

## யாழோசை இன்னிசை வார்ப்புகள்

**இடம்:** யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு
**காலம்:** 09.09.2002 திங்கட்கிழமை மாலை 6.30மணி
நுழைவுச் சீட்டுகள் - 100/=, 200/=
6ஆம் திகதிமுதல் நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
நிகழ்ச்சி அமைப்பு: வல்வை மோகன் (C-23663)

இசைக்கு வசமாகும் இதயங்களே எம் இசை கேட்க திரண்டு வாருங்களே!

எங்கள் நலனைக் கவனியாமல் ஆலயங்களுக்கு ஓட்டோவா?

# திக்கம் வடிசாலை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் குதிப்பு!

## அமைச்சர் மகேஸ்வரனுக்குக் கடிதம்

கரவெட்டி,செப்.5

தமது கோரிக்கைகளை நிறைவேற்றாமல், திக்கம் வடிசாலையின் லாபத்தில் ஆலயங்களுக்கு ஓட்டோ வாங்கிக் கொடுக்கும் இந்து கலாசார அமைச்சின் முடிவை ஆட்சேபித்தும் -

தமது கோரிக்கைகளை வலியுறுத்தியும் -

திக்கம் வடிசாலை ஊழியர்கள் இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

இந்த வடிசாலையின் நிர்வாகம் இந்து கலாசார அமைச்சின் கீழ் வருவதால் இத்துறைக்கான அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு இதுதொடர்பாக ஊழியர்கள் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திக்கம் வடிசாலை ஊழியர்களாகிய நாம் சுமார் கடந்த பத்துப் பதினைந்து வருடங்களுக்கு மேலாக இவ்வடிசாலையில் பணியாற்றி வருகின்றோம். இக்காலப் பகுதிக்குள் நான்கு முறை நான்கு விதமான நிர்வாகங்களின்கீழ் நாம் கடமையாற்றியுள்ளோம். அன்று தொடக்கம் இன்றுவரை எம்மை நிர்வகித்த நிர்வாகங்கள் தங்கள் நலன்களில் கவனம் செலுத்தினவே தவிர எங்கள் நலன்களிலோ அன்றி வடிசாலை நலனிலோ அக்கறை கொள்ளவில்லை. இன்றுவரை எமக்கு எதுவித நியமனங்களோ சம்பள உயர்ச்சிகளோ வழங்கப்படவில்லை. இதனை நாம் அனைத்து நிர்வாகங்களிடமும் பலமுறை எழுத்து மூலம் வேண்டியும் எமக்கு வாய் மூல வாக்குறுதிகள் வழங்கப்பட்டனவேதவிர இன்றுவரை அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் எமது வடிசாலையை இந்து கலாசார அமைச்சு பொறுப்பேற்ற இந்த எட்டுமாத காலப்பகுதியில் ஒரு கோடி 20 லட்சம் ரூபா இலாபமாக கிடைத்துள்ளதாகவும் -

அப்பணத்தில் ஆலயங்களுக்கு ஐம்பது ஓட்டோக்களை வாங்கி வழங்கப்படவுள்ளதாகவும் - தங்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வடிசாலையின் நலனுக்காகக் காலங்காலமாக பாடுபடும் எம் நலனில் எந்தவித கவனமும் செலுத்தாமல் தங்கள் அமைச்சு இந்நடவடிக்கையை மேற்கொள்வது மிகவும் மனவருத்தமாகவே இருக்கின்றது.

எனவே, எமது சகல ஊழியர்களுக்குமான நிரந்தர நியமனமும், அதற்குரிய சம்பளமும் இந்துகலாசார அமைச்சு பொறுப்பெடுத்த கடந்த ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இன்றுவரை நிரந்தரநியமனக் கடிதத்தின் பிரகாரம் உரிய சம்பளத்தின் நிலுவையும் வழங்கப்படவேண்டும். தங்போது வடிசாலை இலாபத்தில் இயங்குவதால் ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்படவேண்டும் என்பன உள்ளிட்ட எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை பனை அபிவிருத்திச் சபைத் தலைவருக்கு முன்னரே அறியத்தந்ததன் பிரகாரம் செப்ரெம்பர் 5ஆம் திகதி (இன்று) வேலைநிறுத்தம் செய்கின்றோம் என்பதனை தங்கள் கவனத்திற்கு அறியத்தருகின்றோம். - என்றுள்ளது. (ஒ-70)

# மூதூரில் பாடசாலை மாணவர்கள் சமாதானத்தை வலியுறுத்தி ஊர்வலம்

மூதூர்,செப்.5

நேற்றுமுன்தினம் மூதூரில் சமாதானத்தை வலியுறுத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைமாணவர்கள் சமாதான ஊர்வலம்ஒன்றை நடத்தினார்கள்.

மூதூர் மத்திய கல்லூரி அதிபர் ஏ.எம். மொகைதீன் தலைமையில் நடைபெற்ற ஊர்வலத்தில் சிங்கள மகாவித்தியாலயம். புனித அந்தோனியார் கல்லூரி, மூதூர் மத்திய கல்லூரி, அல்ஹிதாயா ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

காலை 8.30 மணியளவில் மூதூர் மத்திய கல்லூரி முன்றிலில் ஆரம்பமான சமாதான ஊர்வலம் நகர வீதிகள் ஊடாகச் சென்று முற்பகல் 11.30 மணியளவில் மீண்டும் மூதூர் மத்திய கல்லூரியை வந்தடைந்தது. ஊர்வலத்தில் சமாதான கீதங்கள் பாடிய வண்ணம், சமாதானப் பதாகைகளை மாணவர்கள் ஏந்திச் சென்றனர். இப்பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். மாணவர்களால் சமாதானத்தை வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்களும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (ம)

# முல்லைத்தீவு செயலகத்தின் அழிவுகளை புனரமைக்கக் கோருகிறார் அரச அதிபர்

## சேத விவரங்கள் குறித்துத் தகவல்கள்

முல்லைத்தீவு,செப்.5

1996ஆம் ஆண்டுக்குமுன் முல்லைத்தீவு நகரத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மாவட்டச் செயலகத்தின் இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான கட்டடங்கள், தளபாடங்கள், உபகரணங்கள் ஆகியவை சேதமடைந்துள்ளன என்று முல்லைத்தீவுச் செயலகத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த கரைதுறைப்பற்று செயலகப் பணிமனைக்கு ஒரு கோடி ரூபாவுக்கும், அரச அதிபர் இல்லத்திற்கு 80 லட்சம் ரூபாவுக்கும், ஊழியர்களின் நான்கு விடுதிகளுக்கு மூன்று கோடி ரூபாவுக்கும், மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு இரண்டு கோடி ரூபாவுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் தகவல்கள் கூறுகின்றன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான நிலையில் இவற்றை மீளப் புனரமைக்க நிதிஒதுக்கீடு செய்யுமாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி எமல்டா சுகுமார் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கை காரணமாக வவுனியா வடக்குப் பிரதேச சபைக்கு 30கோடி ரூபா அழிவுகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் சுமார் எழுபதாயிரம் தென்னை மரங்களும் அழிந்துள்ளன.

விமானக் குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல் ஆகியவற்றினாலும் காவலரண் அமைப்பதற்கு இராணுவத்தினர் தறித்ததாலும் இத்தென்னை மரங்கள் அழிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கற்பிப்பதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான தெரிவுப் பரீட்சை நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த அனைவரையும் தவறாது பரீட்சைக்குத் தோற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-117)

நல்லூர் உற்சவ ஒழுங்குகளில்

# பிரதேச செயலர் மட்டத்திலான குழுவின் தலையீடு தேவையில்லை!

## மாநகர முதல்வர் சீற்றம்

யாழ்ப்பாணம்,செப்.5

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தில் நிலவும் குறைகளை நிவர்த்தி செய்வதில் பிரதேச செயலர் மட்டத்திலான ஒரு குழு தலையிடுவது தவிர்க்கப்படவேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாநகராட்சி மன்ற எல்லைப் பரப்பிற்குள் உள்ள நல்லைக் கந்தன் ஆலய உற்சவ காலங்களில் எமது சபை ஊழியர்களால் மேற்கொள்ளப்படும் பணிகள் சீராகவும் சிறப்பாகவும் ஒழுங்காகவும் நடைபெறுகின்றன. சரித்திர வரலாறாக மாநகராட்சி மன்றம்தான் நல்லூர் உற்சவ காலங்களில் அதற்கான வேலைத் திட்டங்களைச் செய்து வருகின்றது.

ஆனால், இவ்வருடம் பிரதேச செயலர் மட்டத்திலான ஒரு குழு இங்கு வந்து எமது ஆலயச் செயற்பாடுகளில் உள்ள குறைபாடுகளை எமக்குச் சொல்லித் திருத்துவதும், எமது ஊழியர்களைக் கொச்சைப்படுத்தி பத்திரிகைகளில் செய்தி வெளியிடுவதுமான செயற்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும்.

எனவே, இவ்வாறான எமது நிர்வாகத்திற்கு எதிரான செயற்பாடுகளை நான் மிகவும் கண்டிப்பதோடு, இனிவரும் காலங்களில் இவர்களின் தலையீடு இடம்பெறாமல் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன் என்று அதில் உள்ளது. (ஒ)

# துப்பாக்கிகளுடன் நடமாடிய இரு தமிழ் இளைஞர்கள் கைது!

## கந்தளாய்க் காட்டில் சம்பவம்

கொழும்பு,செப்.5

கந்தளாய் காட்டுப் பகுதியில் இரண்டு இளைஞர்கள் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்களன்று கந்தளாய் ஈச்சங்குளம் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் இரண்டு தன்னியக்கத் துப்பாக்கிகள் மற்றும் மூன்று கைக்குண்டுகளுடன் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பூரைச் சேர்ந்த மாதவன் வசந்தன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தசாமி இராமசாமி ஆகிய இரு தமிழ் இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அல்லர் என்றும் மாற்று இயக்கங்களைச் சார்ந்தவர்களாக இருக்கலாம் என்றும் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (ம)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(தேர்த் திருவிழா)



## தேரேறி வருவாயே!

கனலாகி கதிராகி உருவாகி
கந்தனாகி கதியாகி விதியாகி
தமிழாகிக் கவியாகிப் புனலாகி
இருளாகி ஒளியாகி மலராகி
மணமாகி மதியாகி மயிலாகி
பதியாகிப் பரமாகிப் பலவாகி
குருவாகி நல்லையில் நின்றாயே! - தமிழர்
குறைதீர்க்க தேரேறி வருவாயே!

- கவிஞர் சரசாலையூரான்

## தேரேறும் நல்லைப் பெருமானே!

எண்தோகை மதனில் அடங்கா திங்கே
யெங்கள் துன்பத் துயரங்கள்
இரக்கம் கொண்டின் னருள் தருவாய்
யினித் துயர் பட்டிட முடியாது
கண்உளகுரு டர்காமுக மடையர்கள் வருமென்னக்
கயவர்கள் இங்கே செறிவானார்
கலங்கும் உந்தன் அடிமைகள் எமக்கு
கடிதினில் உன்னடி தருவாயே
கண்மூன்றுடை கடவுள் நுதலில் கனலாய்
கயவர் மாளப் பிறந்தோனே
கயல்விழி உமையாள் காதல் கொள்ளக்
கையிலை மலையில் திரிவோனே
கண்கள் கவரும் மாயம் புரியும் கள்ளக்
கண்ணன் மகிழும் மருகோனே
பெண்கள் நாணும் பேரழகுடனே
தேரேறும் நல்லைப் பெருமானே!

- நா.நவராஜ்

## சுகவாழ்வு தருவாயே!

இமையோரின் துயர் தீர்க்க
இணையில்லா வடிவேலா
எமை நாளும் மிக வாட்டும்
இனவாதை தொடராதே,
சுமை ஏதும் இலையாக்கி
சுகவாழ்வு தருவாயே
உமையாளா குமரேசா
உயர் நல்லூர்ப் பெருமானே!

- வ.சின்னப்பா

## வேல்கொண்டு தேரேறு!

அடுத்துவந்த துயரங்கள் அலறியோடத் தேரேறு
எடுத்தஜென்மம் ஈடேற முகங்காட்டித் தேரேறு
தொடுத்தஅம்பு இலக்கடைய வழிகாட்டித் தேரேறு
பிடித்ததுன்பம் பிடிப்பிழக்க வேலோடு தேரேறு

- ந.வேந்தன்

## தேரேறி வினை தீர்த்திடையா!

தேரேறித் திருவீதியில்
பவனிவரும் பாலமுருகா - உனை
பாமலரால் வணங்குகின்றேன் - உன்
பட்டுப்போன்ற திருவுருவை!

அல்லலுறும் மக்களை - நீ
அன்புடனே காத்திடுவாய்
நாடிவரும் பக்தரை - நீ
நலம்பெறவே வாழ்த்திடுவாய்
உன்பாதம் நாம் தொழுதோம்
எம் பாவம் தீர்த்திடையா!

ஔவைக்கொரு சிறுவனாய்
தந்தைக்கொரு குருவாய்
உபதேசம் நீ செய்தாய்
எமக்கொரு தந்தையாய்!
அருகினில் வந்திடையா!

சூரனை அழித்த வேலவா
தீமையை அழித்திட ஓடிவா!
தேவர்களைக் காத்த குமரா
தேடிவரும் அன்பரைக் காக்க வா!
நல்லூரில் குடிகொண்ட நாதனே
எமக்கு நல்வழி காட்டிடையா!
தேடி வந்துனை வணங்குகின்றோம்
தேரேறி எம்வினை தீர்த்திடையா!

- க.புஸ்பாஞ்சலி

# உடன்படிக்கை நடைமுறைப்படுத்தாததே பருத்தித்துறை சம்பவத்துக்குக் காரணம்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.5

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் பருத்தித்துறையில் இடம்பெற்ற சம்பவங்கள் போன்ற சம்பவங்களைத் தவிர்க்கமுடியும் எனவே, உடனடியாக அந்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.(சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

பருத்தித்துறையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கோயில்கள், பாடசாலைகளில் இருந்து இராணுவம் வெளியேறுதல், வீதிகள் திறத்தல், மீள்குடியேற்றம் என்பவை புரிந்துணர்வு உடன்படிக்கையில் முக்கியமானவை. இவை நிறைவேற்றப்பட்டாலே இயல்பு சூழல் திரும்பியுள்ளதாக அர்த்தமாகும். ஆனால் வடக்கிலிருந்து கிழக்கு வரை இராணு[illegible]த்தை வெளியேற்றவும் வீதிகளைத் [illegible]றக்கவும் நாளாந்தம் போராட்டம் நடத்தவேண்டியுள்ளது என்பதை பிரதமரும், அரசும் முழு[illegible] புரிந்துகொள்வது அவசியம்.

அரசும் முப்படைகளும் தாம் ஒ[illegible]புக்கொண்டவற்றை நிறைவேற்றினால் மாணவர்களோ பொதுமக்களோ போராட்டக்களத்தில் இறங்கத்தேவையில்லை. மாணவர்கள், இளைஞர்கள் போராட்டக்களத்தில் இறங்கினால் அவர்களைக் கட்டுப்படுத்துவது கடினம் என்பதையும் அரசு உணரவேண்டும். மாணவர்கள் போராட, படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய இதனால் ஏற்படும் இழப்புக்கள் பேச்சை சீர்குலைத்து மீண்டும் யுத்தத்துக்கு வழிவகுத்துவிடும் என்பதையும் அரசு சிந்திக்கவேண்டும்.

எனவே யுத்தநிறுத்தம் ஏற்பட்டு எட்டு மாதங்களாகி பேச்சை ஆரம்பிக்கவுள்ள சூழ்நிலையில் இராணுவம் பொதுஇடங்களில் இருந்து காலதாமதம் இல்லாமல் வெளியேறுவதுடன், இராணுவம் தடை செய்துள்ள சகல வீதிகளும் திறக்கப்படவேண்டும். இராணுவமோ பொலிஸோ தமக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நொண்டிச்சாட்டுச் சொல்வதைக் கைவிட்டு இன்னுமொரு யுத்தம் தொடங்காமல் இருக்க, சமாதானப் பேச்சு ஆரோக்கியமாக நடக்க முப்படையினரும் தமது முழுமையான ஆதரவை நல்கவேண்டும். யுத்தம் என்பது அமைச்சர்களும் ஜெனரல்களும் கோடிக்கணக்கில் சொத்துச் சேர்ப்பதற்கான வியாபாரம் என்பதையும் இழப்புக்களும் மரணங்களும் இளம் மட்டப் படையினருக்கே என்பதையும் அண்மைய சம்பவங்கள் வெளிப்படுத்தியிருக்கும் சூழ்நிலையில், இன்னொரு யுத்தம் தேவையா என்பதையும் சகலரும் சிந்திக்கவேண்டிய காலகட்டம் இது.

மாணவர்களே, இளைஞர்களே! போராட்டம் முக்கியமானது. எங்கள் மண்ணில், எங்கள் வீதியில் நாம் நடமாடத் தடைபோடுவது என்பது முழுமையான ஆக்கிரமிப்பாளர்களின் பண்பு. அதற்கெதிராகப் போராடுவது ஒவ்வொரு தமிழனின் கடமை. ஆனால் சமாதானத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதைக் குழப்பாத வகையில் எமது போராட்டம் அமையவேண்டும். இன்றுமொரு யுத்தத்துக்கான சந்தர்ப்பத்தை நாம் எதிரிக்கு ஏற்படுத்திக்கொடுக்கக்கூடாது என்பதை தயவு செய்து ஆழமாக உணர்ந்துகொள்ளுங்கள். பேச்சுக்களைக் குழப்பும் சக்திகள் இராணுவத்திலும் இருக்கலாம், பொலீஸிலும் இருக்கலாம். எனவே எமது போராட்டம் என்பது எந்தவகையிலும் வன்முறையற்றதாக இருக்கவேண்டும் என்பது இன்றைய காலத்தின் தேவை. இவற்றைப் புரிந்துகொள்வீர்கள் என நம்புகிறேன் - என்றுள்ளது. (ஒ-3)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.5

நல்லூர் ஆலய உற்சவத்தின் தேர்த்திருவிழாவை ஒட்டி ஆலயச் சூழலில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் நிகழ்வுகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ நல்லூர் ஆலய வீதியில் லெப்டினன்ட் கேணல் திலீபன், தளபதி கேணல் கிட்டு ஆகியோரின் நினைவாக 'புலிகளின் குரல்' நிறுவனத்தினரால் நடத்தப்படும் சிறப்புக் கலையரங்கில் மாலை 6.30 மணி தொடக்கம் 10.30 மணி வரை ஆர்.வசந்தனின் புல்லாங்குழல் கச்சேரியும் முல்லைச் சகோதரிகளின் பாட்டுக் கச்சேரியும் இடம்பெறும்.

★ நல்லை வடக்கு வீதி ஸ்ரீ ராகவேந்திரா ம்ருந்திகா சபையில் இளங்கலைஞர் மன்றம் ஏற்பாடுசெய்துள்ள நயினை மைந்தர்களின் கர்நாடக சங்கீதக் கச்சேரியில் மாலை 6.30 மணிக்கு கலாபூஷணம் பொன்.சுந்தரலிங்கம், மிருதங்க வித்துவான் கண்ணதாஸன் ஆகியோரின் மாணவர்களான சுழத்து சீர்காழி, இன்னிசை மைந்தன் சிவமைந்தன் பத்மநாதன், செல்வி சாந்தினி பத்மநாதன் ஆகியோரின் பாட்டுக் கச்சேரி. மிருதங்கம் - ரங்கநாதன் பத்மநாதன், கடம் - மாசிலாமணி தர்மா.

★ துர்க்கா மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வில் மாலை 6 மணிக்கு வாஸஸ்பதி ரஜீந்திரனின் பாட்டுக் கச்சேரி. வயலின் - பாக்கிலட்சுமி நடராசா, மிருதங்கம் - சிவரோதயன், கடம் - சதாவேல்மாறன்.

★ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அதிகாலை திருமுறை வீதிப் பஜனையும் குருமூர்த்த ஆலயத்தில் விசேட வழிபாடுகளும் இடம்பெற்று காலை 9 மணிக்கு சமய தீட்சை வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து குமாரவடிவேல் குருபரனின் பண்ணிசைக் கச்சேரியும், முற்பகல் 9.45 மணி தொடக்கம் 10.30 மணிவரை ஸ்ரீதர்சனன் குழுவினரின் இசைக் கச்சேரி, தொடர்ந்து எஸ். ஜெயகௌரி குழுவினரின் இசைக் கச்சேரி, சங்கீத பூஷணம் வி.சிவஞானசேகரனின் இசைக் கச்சேரி ஆகியன இடம்பெறும். இறுதியில் நண்பகல் 12 மணிக்கு யாழ்.நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவின் 'பக்த அருணகிரி' என்ற வில்லுப்பாட்டும் இடம்பெறும்.

★ இந்து சமய விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில் மாலை 6.30 மணி முதல் வசந்தா வைத்தியநாதனின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

★ வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் மடத்தில் இடம்பெறும் தெய்வீக இசை நிகழ்ச்சியில் முற்பகல் 9.30மணிக்கு இந்துப் பேரவை பஜனைக் குழுவினரின் முருக நாம பஜனை இடம்பெறும். முற்பகல் 10.30 மணிக்கு மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழுவினரின் 'சக்கரத்தில் சைவம்' என்ற தலைப்பிலான பட்டிமன்றம். சைவப் புலவர் சைவசித்தாந்தப்புலவர் பண்டிதர் செ.கந்தசத்தியதாசன் தலைமையில் இப்பட்டிமன்றம் இடம்பெறும். 'ஆசிரிய வாழ்வில் சைவம்' என்ற தலைப்பில் செஞ்சொல்வேந்தர் நித்திய சச்தரனும், 'மாணவ வாழ்வில் சைவம்' என்ற தலைப்பில் தம்பிப்பிள்ளை சுதனும், 'வாணிபத்தில் சைவம்' என்ற தலைப்பில் செல்வநேசன் கவிதரனும், 'அலுவலகத்தில் சைவம்' என்ற தலைப்பில் பரந்தாமன் விஜிந்தனும், 'சமுதாயத்தில் சைவம்' என்ற தலைப்பில் தர்மகுலசேகரம் பிரதீபும், 'சமயலறையில் சைவம்' என்ற தலைப்பில் தர்மலிங்கம் ஸ்ரீபிரகாஸும் வாதிடவுள்ளனர்.

பிற்பகல் 12.30 மணிக்கு பிரபல பாடகர் எஸ்.பத்மநாதன் குழுவினரின் 'முருககீர்த்தனையும்' மாலை 6 மணிக்கு இடம்பெறும். இசைப்பேருரையில் 'கந்தன் பெருமை' என்ற தலைப்பில் கதாப்பிரசங்க பூஷணம் ந.சிவசண்முகமூர்த்தி குழுவினரின் இசைச் சொற்பொழிவு.

★ நல்லூர் மகா சபையார் நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் இசைப் பேருரையில் 'கிருஷ்ணன் தூது' என்ற தலைப்பில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை.நித்தியானந்த சர்மாவின் கதாப்பிரசங்கம். (ரி.86)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி,செப்.5

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறும் இந்த மஹோற்சவத்தின் சப்பரத்திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமையும் இரதோற்சவம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் சமுத்திரத் தீர்த்த உற்சவம் 21ஆம் திகதி சனிக்கிழமையும கேணித்தீர்த்தம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறுவதுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவுபெறும். (ஓ-173)

★ ★ ★

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த ஞாயிறன்று ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 10ஆம் செவ்வாய்க்கிழமை சங்காபிஷேகமும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். உற்சவ காலத்தில் சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசனின் பெரியபுராணம் தொடர் விரிவுரையும் இடம்பெற்றுவருகின்றது. (எ-27)

★ ★ ★

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ண லிங்கேஸ்வர ஆலயத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி, புதிதாக அமைக்கப்பட்ட நூதன சண்டேஸ்வர ஆலயத்துக்கான அஷ்ட பந்தன மஹாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (எ-3)

★ ★ ★

ஆனைக்கோட்டை உயரப்புலம் புனித அடைக்கல அன்னை ஆலய வருடாந்தப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.45 மணிக்கு நடைபெற்றுவருகின்றன. எதிர்வரும் சனிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனையும் நற்கருணைப் பவனியும் இடம்பெறும். மறுநாள் ஞாயிறு காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியைத், தொடர்ந்து திருச்சொரூப தேர்ப்பவனி சொரூப ஆசிர் என்பவற்றுடன் விழா நிறைவுபெறும். (எ-3)

★ ★ ★

யாழ்.புனித அடைக்கலமாதா ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. எதிர்வரும் 7ஆம் திகதி மாலை நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்று காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் மாலை திருச்சொரூப பவனியும் ஆசிரும் இடம்பெறும். (எ-ரி)

★ ★ ★

சாந்தை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

விநாயகர் சதுர்த்தி தினமான எதிர்வரும் 10ஆம் திகதி உற்சவம் பூர்த்தியடையும். இவ்வாலயத்தில் பல லட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மணிக்கோபுரத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிறு காலை நடைபெறும்.(எ-135)

## கலந்துரையாடல்

சண்டிலிப்பாய்,செப்.5

சங்கானை (வலி.மேற்கு) பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறும். (ஒ-135)

## ஸ்பார்ட்டக்கஸ் விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்.திருமறைக் கலாமன்றத்தினால் அண்மையில் மேடையேற்றப்பட்ட 'ஸ்பார்ட்டக்கஸ்' நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்களுக்கான ஒன்றுகூடலும் விமர்சன அரங்கும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நாடகத்தில் பங்கேற்ற அனைத்துக் கலைஞர்களையும் இந்நாடகத்தைப் பற்றிய விமர்சனத்தைத் தெரிவிக்க விரும்புவோரையும் இந்த ஒன்றுகூடலில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-8)

## செப்.13ஆம் திகதிக்கு முன்னர்

# பிரதமர் பதில் தராவிட்டால் வெகுஜனப் போராட்டங்கள்

## வலி. வடக்கு, தெற்கு ஒன்றியம் முடிவு

வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர்வது தொடர்பாக எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் சாதகமான பதிலை அனுப்பும்படி பிரதமரிடம் கோருவது என்றும் -

அவ்வாறு பதில் தராதபட்சத்தில் அன்றுமுதல் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பது என்றும்-

வலிகாமம் வடக்கு, தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் கூட்டம் அதன் தலைவர் சி.குமாரவேலு தலைமையில் நடந்த சமயம் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன.

★ வலி.வடக்கு மக்கள் அனைவரையும் உடன் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும்.

★ வன்னியிலிருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் திரும்பி வருவதால் அவர்களது வீடுகள், காணிகளைக் கையளித்துவிட்டு வலி. வடக்கு மக்கள் இருப்பிடங்களின்றி அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

★ முகாம்களிலும் குடிசைகளிலும் வாழும் மக்கள் மழைகாலம் ஏற்படுவதால் பெரும் துன்பங்களை அனுபவிக்க நேரிடும்.

★ வலி.வடக்கைச் சேர்ந்த விவசாயிகள் நிலமின்றி உள்ளனர். கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்ல அனுமதியில்லை.

மேற்கண்ட நான்கு அம்சங்களையும் தெரிவித்து பிரதமருக்குக் கடிதம் அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது.


அக்கடிதத்துக்குப் பதில் கிடைக்காவிட்டால் எதிர்வரும் 13ஆம் திகதி வெகுஜனப் போராட்டத்தை மேற்கொள்வது என்றும் முடிவாகியுள்ளது. (ஒ-3)

## கௌரவிப்பு விழா

கலாபூஷணம் விருதுபெற்ற மிருதங்க வித்துவான் பசுபதி ரத்தினம் செல்வராசாவைக் கௌரவிக்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பலரின் பாராட்டுரைகளும் இடம்பெறவுள்ளன.(எ-3)

## முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 31 - 08 - 1941



உதிர்வு 04 - 08 - 2002

### அமரர் சிவசங்கரம் பாலேந்திரன்

(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

அன்னாரின் மறைவையொட்டி எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், பருத்தித்துறை. (C/23685)

நீதிபதி, உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பொன்னையா

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.684, கொத்தாம்பியா குளம், துணுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னையா நேற்று (4.9.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (5.9.2002) வியாழக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் துணுக்காய் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.684, கொத்தாம்பியாகுளம், துணுக்காய். (7845)

தகவல்: சத்தியபாமா (மகள் - ஆசிரியை) துணுக்காய் அ.த.க.பாடசாலை.

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் T.குமாரசுவாமி

(முன்னாள் விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

அன்னார் திருமதி லோ.குமாரசுவாமியின் (முன்னாள் அதிபர், யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை) பாசமிகு கணவராவார். T.குமாரசுவாமி அவர்கள் கொழும்பில் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

தம்பசெட்டி வீதி, பருத்தித்துறை. (U/23684)

அதிபர், ஆசிரியர்கள், கல்விச் சமூகம், யா/வட. இந்து மகளிர் கல்லூரி.

# கொழும்பில் 6 மாதங்களில் 1,061 குற்றச்செயல்கள்!

கொழும்பு,செப்.5

இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களில் கொழும்பு நகரில் மொத்தம் 1,061 குற்றச்செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. கொலைகள், கொள்ளைகள் ஆகியவையும் இவற்றில் அடங்கும்.

கொழும்பு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் போதி லியனகே இத்தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்.

இக்குற்றச் செயல்களில் 28 கொலைகள், முக்கிய கொள்ளைகள் 52, பாலியல் வல்லுறவுகள் 10 ஆகியவை உள்ளடங்கும்.

இக்காலகட்டத்தில் கொழும்பு நகரில் சுமார் 4ஆயிரம் வாகன விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன.

கொழும்பு குற்றச்செயல் ஒழிப்புப் பிரிவு கடந்த மாதம் 26ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது முதல் கொழும்பு நகரில் குற்றச்செயல்கள் பெருமளவில் குறைந்திருக்கின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹாட்லி, மெதடிஸ் கல்லூரிகளின் நிலை பற்றி ஆராய இன்று கூட்டம்

வடமராட்சி,செப்.5

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவற்றின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி இரு பாடசாலைகளினதும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழையமாணவர் சங்கப் பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரை மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் அதிபர்கள் கேட்டுள்ளனர்.

இராணுவ அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-173)

## நினைவுதினக் கூட்டம்

அமரர் மு.கார்த்திகேயனின் 25 ஆவது வருட நினைவுதினக் கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். சிற்றி ஹோல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். கிளையின் தலைவர் க.நடராசா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பலர் உரை யாற்றவுள்ளனர். (எ-3)


**இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான சுற்றுலா பற்றிய கலந்துரையாடல்**

மேற்படி விடயம் தொடர்பாக நாளை (06.09.2002) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மாணவர் பொது அறையில் இடம்பெறவுள்ளது. சுற்றுலாவில் பங்குபற்ற விரும்புபவர்கள் தவறாது சமுகந்தரவும்.

(7943) ~ சுற்றுலா ஒழுங்கமைப்பாளர்கள்.

**HAND PHONE 077**

கையடக்கத் தொலைபேசியை
இணைப்புகளுடன் பெற
நாடுங்கள்:
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
(7946) நீகரை வீதி, சங்கானை.

**Bright Book Centre (Pvt.) Ltd.**

இலக்கிய மாதத்தைக் கௌரவிக்கும் முகமாக
யாழ்ப்பாணத்தில்
பண்டத்தரிப்பு காலையடி யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையில்
நாளை (06.09.2002) வெள்ளிக்கிழமை
நடமாடும் புத்தகச் சந்தை நடைபெறும்.

பல நூற்றுக்கணக்கான புத்தகங்கள்மூலம்
இலக்கிய மாதத்தில் புத்தக வேள்வி
படைக்கிறது BRIGHT

எனவே பாடசாலை நூலகத்தினர், வாசிப்புக் கலாசாரத்தில் ஆர்வமுள்ளோர், மாணவ, மாணவிகள் அனைவரும் கலந்து கொள்ளவும். Bright இன் நடமாடும் புத்தகச் சந்தையை நடத்தவிரும்பும் பாடசாலைகள் தொடர்புகொள்க. (7951)

S-27, P.O.BOX 162, C.S.M.C., Colombo - 11.
T.P. - 434770, Fax - 333279.

**INSTALLATION FUNCTION**

REV. DR. JUSTN B. GNANAPRAGASAM
will be installed as:
THE RECTOR
of
ST.PATRICK'S COLLEGE, JAFFNA.
on
*Thursday, 5th September 2002*
*at 9.30 a.m.*

We cordially invite the Old Boys, Parents and well wishers to the above function.

*The Patrician Family.*
(7942)


# மத்திய கல்லூரி அதிபருக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ். மத்திய கல்லூரி அதிபரின் நிதி, நிர்வாக துஷ்பிரயோகங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி யாழ்.கல்வி வலய அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அக்கல்லூரியின் பழைய மாணவர்கள் என்று தெரிவித்து நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்களுடன் வலயப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கலந்துரையாடினார்.

தேசிய பாடசாலை விவகாரத்தில் குறிப்பிட்ட வரையறைக்குள் மட்டுமே தம்மால் தலையிடமுடியும் என்றும் -

மத்திய கல்வியமைச்சுக்கு கடிதம்மூலம் முறையிடலாம் என்றும் -

மத்திய அமைச்சில் இருந்து அறிவுரை ஏதும் கிடைக்கும் பட்சத்தில் இந்த விடயத்தில் தம்மால் தலையிடமுடியும் என்றும் பணிப்பாளர் விளக்கம் அளித்தார்.

அதன்பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (ம-10-51-86)

# மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் காயம்

பளை, செல்வபுரத்தில் உள்ள தனது காணியில் துப்புரவுப்பணியில் ஈடுபட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி உடலில் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நடராசா கிருஷ்ணபிள்ளை (சாமி - வயது 48) என்பவரே காயமடைந்தவராவார்.

மீளக்குடியமரும் நோக்குடன் வளவுக்குள் காணப்பட்ட புற்களை துப்புரவுசெய்தபோது மண்வெட்டி மிதிவெடியில் மோதி வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் இத்தாவில், ஆனைவிழுந்தான் பகுதிகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றிய வேளையில் படையினர் செல்வபுரம் பகுதியில் நிலைகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-117)


தேரேறி வரும்
மூஷகப் பெருமானை
அருள் வேண்டி
பிரார்த்திக்கின்றோம்.

காரை. துரித
காகிதாதிகள் சேவைகள்
KQDS
ஆஸ்பத்திரி வீதி,
(7953) காரைநகர்.

**RAM CD WORLD**

புதிய ஓடியோ CD வெளியீடு
லேசா லேசா
பைவ் ஸ்டார்
ஆல்பம்
நம்ம வீட்டுக் கல்யாணம்
BOMBAY DREAMS
(A.R.RAHMAN)
ஸ்டார் நைட் (VCD)
(சிங்கப்பூர்)
ராம் சீடி வேல்ட்,
220, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 077-878140 (7932)

**நிரஞ்சனாஸ்**
சங்கானை
அஜித், சங்கவி, நாசர்
நடித்த
அமராவதி
(ரீஸ்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.30 (புதியநேரம்). (E-23694)

**நாகம்ஸ்** சுன்னாகம்
சூர்யா, லைலா, ஸ்நேகா நடிக்க
உன்னை
நினைத்து (ரீஸ்ஸ்)
காட்சிகள் : 11.00, 3.00
சனி, ஞாயிறு: 11.00, 3.00, 6.30 (பு.நே.)

**ராஜா** யாழ்ப்பாணம்.
3ஆவது இனத்திரள் வாரம்
ரஜனிகாந் மனிஷா கவுண்டமணி நடித்த
பாபா
ரிக்கட் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
பல்கனி 60/-, பின்வரிசை 50/-
காட்சிகள்: 10.30, 2.30, 6.00


# பேச்சில் ஹக்கீமின் பங்கென்ன? மு.கா. உயர்பீடம் தீர்மானிக்கும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தாய்லாந்துப் பேச்சுக்களில் எந்த அடிப்படையில் பங்குபற்ற வேண்டும் என்பதை முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர்பீடம் கூடித் தீர்மானிக்கும் என்று காங்கிரஸின் பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

தாய்லாந்துப் பேச்சின் முதல் சுற்றில் அரசாங்கப் பிரதிநிதியாகவும் பின்னர் முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாகவும் ரவூப் ஹக்கீம் கலந்துகொள்ள வேண்டுமென்று நேற்றுமுன்தினம் லண்டனில் அமைச்சர் ஹக்கீம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டது தெரிந்ததே.

எவ்வாறாயினும், தாய்லாந்துப் பேச்சுக்களில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாகவே ரவூப் ஹக்கீம் கலந்துகொள்ளவேண்டும் என்ற முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லையென்று துறைமுக அபிவிருத்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளரான ஹில்மி முகம்மட் தெரிவித்திருக்கிறார்.

அதனால், அமைச்சர் ரவூப் ஹக்கீம் இன்று நாடு திரும்பியதும் முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர்பீடம் கூடி அது தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியிருக்கிறார். (ம)

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் இன்று நினைவு தினம்

மட்டக்களப்பு,செப்.5

மட்டக்களப்பு - வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வைத்து 1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன 156பேர்களின் நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதனையொட்டி கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் இன்று காலை 10மணிக்கு அஞ்சலிக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் ஆலயங்களில் விசேட பூசைகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. (ம)




**கண்ணீர் அஞ்சலி**

வல்லிபுரக்குறிச்சி - பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் உசனை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் இராசா சிவபாதசுந்தரம்**

*(பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், பௌதிகவியல்துறை - யாழ். பல்கலைக்கழகம்)*

அவர்கள் 03.09.2002 செவ்வாய்க்கிழமை காலமாகியதையிட்டு மிக மனம் வருந்துகின்றோம். அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி!*

*பௌதிகவியல்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*
(7947)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி செல்லத்துரை

(ஓய்வுபெற்ற அரசாங்க வைத்திய அதிகாரி)

சத்திரந்தை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை அவர்கள் நேற்று (04.09.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நவரட்ணம் மற்றும் தங்கம்மா (வவுனியா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2002) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல. 125, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*
த.தருமராசா
(கஜபதி - மருமகன்)
(7954)

### திருமதி அன்னபாக்கியம் நடராஜா

(பாக்கியம்)

சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரும் வவுனியா, கோயிற்குளம் பகுதியில் வசித்துவந்தவருமான திருமதி அன்னபாக்கியம் நடராஜா (பாக்கியம்) நேற்று 04.09.2002 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் நடராஜாவின் (C.T.B. - Kondavil) அன்பு மனைவி ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*T.P. 070-212676,*
*வவுனியா T.P. 024-21242*
திருமதி செ.செல்வராணி
(மைத்துனி) HSCMF
(C/23687)

### அரசபிள்ளை தெய்வேந்திரலிங்கம்

('ஓய்வுபெற்ற சாரதி' - ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பணிமனை UNDP, கொழும்பு)

கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகக் கொண்ட அரசபிள்ளை தெய்வேந்திரலிங்கம் 03.09.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரசபிள்ளை - கண்ணகைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் லோகாமித்திரையின் அன்புக் கணவரும் கரனின் பாசமிகு தந்தையும் அனந்தேஸ்வரி மகேந்திரலிங்கம் (ஜேர்மனி), யோகேஸ்வரி, தனேஸ்வரி (பிரான்ஸ்), பாலகுமார், செல்வம் (ஜேர்மனி), ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான முத்தையா, தங்கமுத்து ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற தர்மலிங்கம், நல்லம்மா (ஓய்வுபெற்ற மருத்துவிச்சி), சிவபாதம் (நீர்வேலி ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.09.2002) புதன்கிழமை பிற்பகல் அவரது கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்,
*ஆஸ்பத்திரியடி,*
*கோப்பாய் மத்தி.*
குடும்பத்தினர்.
(C/23686)

# யாழ். மாவட்ட தொலைபேசி இலக்கங்கள் 11ஆம் திகதிமுதல் மாற்றப்படுகின்றன!

யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை பகுதிகளுக்கான தொலைபேசி இலக்கங்கள் எதிர்வரும் 11ஆம் திகதிமுதல மாற்றப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் புதிய பரிவர்த்தனை நிலையத்தை எதிர்வரும் 11ஆம் திகதி இயக்குவதறகு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அடுத்தே தொலைபேசி இலக்கங்கள் மாற்றப்படவுள்ளன எனத் தெரிவிக்கப் பட்டது.

யாழ் மாவட்டத்துக்கான குறியீட்டு இலக்கம் (CODE NUMBER) மாற்றம் செய்யப்படவில்லை. அந்த இலககம் தொடர்ந்தும் 021 ஆகவே இருக்கும்.

புதிய நடைமுறையின்படி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தோர் தற்போது பாவனையில் உள்ள நான்கு இலக்கங்களுக்கு முன்னால் இனிமேல் 222 என்ற மூன்று இலக்கத்தை மேலதிகமாகச் சேர்க்க வேண்டும்.

அதேவேளை - பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்தோர் தற்போது பாவனையிலுள்ள ஐந்து இலக்கங்களுக்கு முன்னால் 22 என்ற இரு இலக்கங்களை மேலதிகமாகச் சேர்கக வேண்டும்.

மேற்படி புதிய நடைமுறைகளின படி யாழ். மாவட்டத்துக்கான தொலைபேசி இலக்கம் குறியீட்டு இலக்கத்துடன் (Code Number) சேர்த்து பத்தாக அதிகரித்துள்ளது. (உதாரணம்:- 021-2222030)

இலங்கையின் எப்பாகத்திலும் பத்து இலக்கங்கள் கொண்ட தொலைபேசி இலக்கங்கள் இதுவரையில் பாவனையில் இருந்ததில்லை. யாழ். மாவட்டத்திலேயே முதற்றடவையாக இது அறிமுகப்படுத்தப்படுகின்றது.

எதிர்வரும் 11ஆம் திகதி யாழ். வரும் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் புதிய பரிவர்த்தனை நிலையத்தை உத்தியோகபூர்வமாக இயக்கவைக்கவுள்ளார்.

அன்றுமுதல் புதிய இலக்கங்களும் பாவனைக்கு வரும். (எ-3)

## 9ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தமானியில் வெளியிடவும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுப்பதென்பதில் அரசு உறுதியாக இருந்துவருகிறது.

ஜனாதிபதி தனது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளிக்கவே கடந்த 3 ஆம் திகதி வர்த்தமானியில் இத்திருத்தச் சட்டநகலை வெளியிடும் தனது திட்டத்தை அரசு இறுதி நேரத்தில் தாமதித்தது.

இருப்பினும், திருத்த நகல் சட்டத்தை வர்த்தமானியில் பிரசுரித்து பின்னர் நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரும் அரசின் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.(ம)

## புலிகள் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த 16ஆம் திகதி தாய்லாந்தில் ஆரம்பமாகவிருக்கின்றன. பேச்சுக்கு முன்னர் தமது இயக்கம் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என புலிகள் வலியுறுத்திவந்தனர். அதன்படி பேச்சுக்குப் பத்துநாள்களுக்கு முன்னர் - அதாவது 6ஆம் திகதி - புலிகள் மீதான தடை நீக்கப்படும் என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

பேச்சுக்கு முன்னர் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதை ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் மற்றும் பொ.ஐ.முன்னணியின் மூத்த அரசியல் பிரமுகர்கள் சிலரும் ஜே.வி.பியினரும் கடுமையாக எதிர்த்து வந்தனர்.

தடை நீக்கப்படுவதைத் தடுக்க ஜனாதிபதியும் எதிர்க்கட்சியினரும் சேர்ந்து கடைசி நேரத்தில் முட்டுக்கட்டை எதையும் போடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டு வந்தது. அந்த நிலையில் திடுதிப்பென - இரண்டு நாள்கள் முந்தியே - தடை நீக்க உத்தரவில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஒப்பமிட்டு அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். அது பற்றிய தகவலும் நேற்று முன்னிரவே திடீரென வெளியாகியது!

தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு முழு நாடுமே திரண்டு ஆதரவு கொடுப்பதைப் பறைசாற்றும் விதத்தில், அடுத்த 9ஆம் திகதி கொழும்பில் ஆளும் கட்சி ஏற்பாடு செய்திருக்கும் மக்கள் பேரணியை, மிகுந்த எழுச்சியுடன் நடத்தவும் நேற்றுக் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிய வந்தது. (ம-12)

## ஊர்காவற்றுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை முதல் இவ்வீதியூடாக எவ்வித இடையூறுகளுமின்றி பொதுமக்கள் போக்குவரத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 12 வருடங்களாக பாவனையில் இல்லாத காரணத்தினால் வீதி பலத்த சேதமடைந்து காணப்பட்டது. வீதியின் இரு மருங்கிலும் பற்றைகள் மண்டிக்கிடக்கின்றன. இதனால் பொதுமக்கள் வீதியூடாகப் பயணம் செய்வதில் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். (ம-8-16-173)

# தாய்லாந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எப்பட வேண்டும் என ஜனாதிபதி விரும்புகின்றார்.

இந்த விடயம் குறித்து அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அரசின் பதிலுக்காக ஜனாதிபதி காத்திருக்கின்றார்.

இவையெல்லாவற்றிற்கும் முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டுமாயின், அதற்கு முன்னர் தடை நீக்கம் பற்றிய பத்திரத்தை பாதுகாப்பு அமைச்சர் அமைச்சரவையில் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் அதுகுறித்து தனது கருத்தை ஜனாதிபதி தெரிவிப்பார்.

தாய்லாந்தில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் இடம்பெறவுள்ள முதல் சுற்றுப் பேச்சுக்களின்போது எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுமானால் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் வழங்குவது குறித்து ஆலோசிக்கலாம். இதுதான் ஜனாதிபதியின் கருத்து.

அரசு - புலிகளிடையேயான கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக அரசுத் தரப்பினால் விடுவிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் கைதிகளின் பட்டியலை ஜனாதிபதி கோரியிருக்கின்றார். அது கிடைத்ததும் கைதிகள் விடுதலைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவிப்பார்.

அரசுடன் இணைந்து ஜனாதிபதி நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும் என்றே நாட்டு மக்கள் விரும்புகின்றனர். மக்களின் விருப்பை ஏற்று அத்தகைய அமைப்பை ஏற்படுத்தும் கடப்பாட்டை நிறைவு செய்யவே ஜனாதிபதியும் விரும்புகின்றார். அந்த வகையில் ஜனாதிபதியும் அரசும் மக்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வர்.

அரசமைப்பு மாற்றம் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் விதத்தில் அமையவேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு.

அதிகாரப் பரவலாக்கல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல் ஆகிய இரு முக்கிய தேவைகள் உள்ளன.

அதிகாரப் பரவலாக்கம் குறித்து ஜனாதிபதி தற்போது தனது ஆலோசகருடன் விரிவாகக் கலந்தாலோசித்து வருகின்றார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கக் கோரும் அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி செயலகம் விரைவில் சமர்ப்பிக்கும்.

இந்த இரு பிரதான தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு முன்னர், அரசமைப்பின் 17ஆவது திருத்தத்துக்கு அமைய சுதந்திர ஆணைக் குழுக்கள் அமைக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி கருதுகின்றார் - இப்படி ஹரீம் பீரிஸ் கூறினார். (ம-12)

## தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீவிபஸ்ஸிதேரர் பிரதமரிடம் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு படைகளை உஷார்நிலையில் வைத்திருக்கத் தான் நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமர் பதிலளித்தார். நாட்டின் பாதுகாப்புக்காக வெளிநாட்டவரிடம் இருந்து ஆலோசனை பெறப்படுவதாகவும் அவர் சொன்னார்.

இச்சந்திப்பை அடுத்து பிரதமர் ரணில் அஸ்கிரிய பீடாதிபதியைச் சென்று சந்தித்தார். பிரதமரின் சமாதான முயற்சிக்கு ஆசி வழங்கிய அஸ்கிரிய தேரர், அச்சமின்றி நேர்மையாகச் செயற்படுமாறும் அவ்வாறு செயற்படும்போது என்ன எதிர்ப்பு வந்தாலும் பயப்படவேண்டாம் என்றும் பிரதமரிடம் கூறினார். (ம)


பார்த்து விட்டீர்களா?

பாதாளக் கிணற்றில் அதி பயங்கரக் காட்சி!

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக

பாதாளக் கிணற்றில்

பெண்கள் பங்குபற்றும்

நாலுசக்கர மோட்டார் கார் சவாரி அத்துடன்

இரண்டு மோட்டார் சைக்கிள்களின் சாகசம்.

இந்தச் சந்தர்ப்பம் நல்லூர்த் திருவிழா முடியும் மட்டுமே!

இன்று காலை 9 மணியிலிருந்து.............!

இடம்: நல்லூர் மாநகரசபைக்கு

(தீயணைப்பு நிலையத்திற்கு) அருகில். (7921)

காணத் தவறாதீர்கள்!



யாழ். மாவட்ட வாயு ஒட்டுநர்களுக்கு ஒரு நற்செய்தி

Ceylon Oxygen HYDRO

GAS WELDERS

வாயு ஒட்டு வேலைகளுக்குப் பயன்படும் ஒட்சிசன், அசற்றலின் போன்ற வாயுக்களையும் அதற்கான உபகரணங்களையும் யாழ். மாவட்டத்தில் விநியோகிப்பதற்கான ஏக முகவர்களாக AMT TRANSPORT SERVICE ஆகிய எங்களை இலங்கை ஒட்சிசன் லிமிட்டெட் நியமித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

AMT TRANSPORT SERVICE

பருத்தித்துறை வீதி, இருபாலைச்சந்தி,

(7916) கோப்பாய், யாழ்ப்பாணம். T.P. - 077-686220.



ஞானோதய அக்கடமி

சங்கத்தானை, சாவகச்சேரி.

2003 DAY, 2003, 2004

புதிய பிரிவு ஆரம்பம்

தமிழ்: திரு. அமரசிவம்

திரு. அகிலன்

இந்துசமயம், இந்து நாகரிகம் } திரு. இராஜேஸ்கண்ணா.



BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

A/L 2003

PHYSICS

காந்தப்புலம்

By. ஜெயசீலன் (7923)

ஆரம்பம்: 06.09.2002 Fri. 4.30



வீடு உடன் தேவை

யாழ்நகரில் ஆரம்பிக்க இருக்கும் தனியார் கல்விசார் நிறுவனம் ஒன்றின் அலுவலகம் அமைப்பதற்கு யாழ். மாநகரசபைக்குட்பட்ட பிரதான வீதிகளின் அருகே, சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு/குத்தகைக்குத் தேவை. விரும்புவோர் பூரண விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விள.இல.1629,

மே/பா. உதயன்.

(7952)



Computer Courses

New Batches Start on : 14/09/2002 Saturday at 9.00 am

| Courses | Duration (Month) |
| --- | --- |
| Diploma in MS Office | 5 |
| Diploma in Internet Technology | 4 |
| Diploma in Java Programming | 5 |
| Diploma in Visual C Programming | 4 |
| Diploma in Visual Basic Programming | 4 |
| Diploma in Engineering Drawing and AutoCAD | 5 |
| Diploma in Computer Programming | 8 |
| Technician Diploma in Computer Hardware | 6 |
| Advanced Diploma in Applied Computer Science | 12 |

பயிற்சி நெறிகள் அனைத்தும் வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.

Institute of Informatics Studies

Head Office:
100, Clock Tower Road, Jaffna.
☎ 021-2831 Email: iis@sltnet.lk

Branches:
Nelliyady Karaveddy.
Main Street, Chankanai.



RAMCO CEMENT

ராம்கோ சிமெந்து

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதிசெய்யப்பட்ட

ராம்கோ RAMCO சிமெந்து (கோபுர மார்க்)

விற்பனைக்கு வந்துவிட்டது!

☆தேவையான நிறுவனங்கள் உடன் தொடர்புகொள்ளவும். முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு இலவசமாக லொறிமூலம் விநியோகம் செய்யப்படும்.

ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதி நிறுவனம்:

ஈஸ்வரபகவான் & கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி, (C/23679) யாழ்ப்பாணம். T.P:021 - 2350



தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

வடமராட்சி

வடமராட்சிப் பகுதியில் இயங்கும் கல்வி நிலைய நிர்வாகிகள், பிரத்தியேக வகுப்பு (5மாணவர்களுக்கு மேல்) நடத்துபவர்கள் சகலரும் 07.09.2002 சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஒன்றுகூடுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

மு.கு. கலந்துரையாடலுக்கு சமுகம் அளிக்காதவர்களும் பதிவு செய்யாது வகுப்பு நடத்துபவர்களும் அழைக்கப்பட்டு விளக்கம் கோரப்படும்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம். (7884)

வடமராட்சி ஒன்றிய
மாவட்டப் பிரதிநிதிகள்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன், (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.